உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க ஆண்டு ஆனித் திங்கள் 10—7—67 [இதழ் 8

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

இட்டசனம் எங்கே
  இதமகிதந் தானெங்கே
துட்டசனம் எங்கே
  தொழிலெங்கே — சிட்டருடன்
கூடி யிருந்ததெங்கே
  குன்ருச் சிவானந்தம்
நாடியது வாயிருந்த
  நாள். (54)

ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 || 10-7-67 || இதழ் 8

உட்பொருள்

எண்		பக்கம்
1	வெள்ளந்தாழ் விரிசடையான்	... 409
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	.. 416
3	சித்தாந்த வினுவிடை	... 424
4	திருத்தொண்டர் வரலாறு	... 429
5	அஞ்சுஊ சிங்கம்	... 433
6	தையல்நாயகி அந்தாதி	435
7	கவிதை இன்பம்	... 439
8	தமிழ்நாடு தெய்விகப் பேரவை	... 446
9	வரவேற்பிதழ்கள்	... 451
10	மதிப்புரை	... 463
11	இலவச சித்த வைத்தியசாலை	... 465
12	செய்திகள்	... 468
13	எதிர்காலம்	... 470
14	Extract from the Visitor's Book	... 423, 432, 445, 464, 467, 467, 469

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க - ஆனி - 10—7—67 [இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியிஞய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

வெள்ளந்தாழ் விரிசடையான்

'இயற்கை! இயற்கை!!' என்று இக்காலத்தில் பேசப்படுகின்ற பொருள்கள் எல்லாம், ஒருவகையில் இயற்கைதான். நிலம், கடல், மலை, பெருங்காடுகள் போன்றவைகளை எந்த மனிதன் அல்லது மனிதர்கள் ஆக்கிஞர்கள்? ஒருவரும் இல்லை. ஒருவராலும ஆக்கப்படாது உள்ள பொருள்களை 'இயற்கை' எனறல் மரபு. அதனால், எந்த மனிதராலும் ஆக்கப்படாத இப் பொருள்களை, 'இயற்கை' என்கின்றனர். 'மக்களால் ஆக்கப்படாத பொருள்கள்' என்னும் அளவில் இவைகளை, 'இயற்கை' என்பது பொருத்தந்தான்; ஆயினும், 'இவை ஒருவராலுமே ஆக்கப்படாத

பொருள்கள் அல்ல; 'இறைவன் அல்லது கடவுள் எனப் படும் ஒருவனால் ஆக்கப்பட்ட பொருள்கள்தாம் இவை' என்கின்றனர் பெரியோர். அவ்வொருவன் உலகத்தாரால் காணப்படாதவனாய் இருத்தலால், 'இவ்வுலகம் அவனால் ஆக்கப்பட்ட பொருளே' என்பதைச் சிலர் உடன்பட மறுக் கின்றனர். எனினும், நுட்பமாக நோக்கின், 'இவ்வுலகமும் இயற்கையன்று, செயற்கைதான்' என்பது புலப்படும்.

இயற்கைக்கும் செயற்கைக்கும் வேறுபாடு என்ன? என்றும் ஒரே நிலையாய் மாற்றமின்றி இருப்பது இயற்கை: அவ்வாறின்றிக் கணந்தோறும் மாறுதலை அடைவது செயற்கை. இவ்வாறன்றி, 'மாறுதலை அடைவதும் இயற்கைதான்' என்று கூறினால், இயற்கைக்கும் செயற் கைக்கும் வேறுபாடே இல்லாமல் போகும்.

செயற்கைப் பொருள்கள் கணந்தோறும் மாற்றத்தை அடைதல் கண்கூடு. புதிதாக ஆக்கப்பட்ட ஆடையை. விற்கின்ற ஒருவர், வாங்க நினைப்பவரிடம் கொடுக்கும் பொழுது, கொடுப்பவரும் அச்சத்துடன் கொடுக்கின்றார்; வாங்குபவரும் அச்சத்துடன் வாங்குகின்றார். ஏன்? 'அந்த ஆடை விலைப்படும் வரையில் ஒரு சிறு மாற்றமும் அடையா திருக்க வேண்டுமே' என்ற எண்ணத்தினால்தான். புத்தம் புதியனவாகக் கட்டப்பட்ட, சிற்பம், ஓவியம் நிறைந்த மாளிகைகள், சில நாட்களிலே அந்தப் பொலிவை இழந்து, நாள் செல்லச் செல்லப் பழையனவாகிவிடுவதைப் பார்க்கின் றோம. ஆகவே, செயற்கைப் பொருள்கள் யாவும் எப்பொழுதும் ஒரு நிலையிலே நில்லாமல் மாற்றத்தை அடைந்துகொண்டேயிருக்கும் என்பது தெளிவு.

நாம், 'இயற்கை' என்று சொல்லுகின்ற உலகமும், எப்பொழுதும் மாற்றத்தை உடையதாதல் கண்கூடானதே. நிலமாய் இருந்த இடம் கடலாகிவிடுவதும், கடலாய் இருந்த இடம் நிலமாய்விடுவதும், நாடாய் இருந்த இடம் காடாகி விடுவதும், காடாய் இருந்த இடம் நாடாகிவிடுவதும், மற்றும்

இவைபோன்ற மாற்றங்கள் பலவும் உலகிற்குப் புதுமை யல்ல.

'உலகம், மாறுதலையே தன் தன்மையாகக் கொண்டுள்ளது' என்பதை மாணிக்கவாசகர், "மாற்றமாம் வையகம்" என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். இந்த மாற்றத்தையே திருவள்ளுவர், 'நிலையாமை' என்று வைத்து, ஓர் அதிகாரமே செய்துள்ளார். எனவே, மாற்றத்தையே தன் தன்மையாக உடைய உலகத்தை 'இயற்கை' என்றல் எப்படி? அது பொருந்தாமையால், ஒருவனால் ஆக்கப்பட்ட செயற்கை தான்' என்றே கொள்ளவேண்டியுள்ளது. அந்த ஒருவன் காணப்படாதிருத்தலாலே அவன் இல்லாதவனாகிவிட மாட்டான்.

சிறிய பொருள்களைச் சிறிய அறிவும், சிறிய ஆற்றலும் உடையவர்கள் செய்கின்றார்கள். பெரிய இவ்வுலகத்தை - இன்னும் இதுபோன்ற எண்ணில்லாத உலகங்களையும் பெரிய அறிவும், பேராற்றலும் உடைய ஒருவன் செய்கின்றான்; அதுவும் நினைத்தமாத்திரத்திலே செய்கின்றான், உலகங்கள் எல்லாவற்றையும் நினைத்துப்பார்த்தால், அவை எத்துணைப் பெரியன? எவ்வளவு விசித்திரமானவை? இவைகளை எல்லாம் ஒருவன் நினைத்த மாத்திரத்திலே செய்கின்றான், மாற்றியமைக்கின்றான் என்றால், அவன் எத்துணைப் பெரியவனாய் இருத்தல் வேண்டும்? 'நினைத்த மாத்திரத்திலே செய்கின்றான்' என்பது, 'அவன் தன் முழு ஆற்றலையுங்கொண்டு இவ்வுலகத்தைச் செயற்படுத்த வில்லை; தனது ஆற்றலில் எத்துணையோ கோடியில் ஒருகூறாய சிறிது ஆற்றலைக்கொண்டே அவன் எல்லாவற்றையும் செய்கின்றான்' என்பதையே தெரிவிக்கின்றது. இந்நிலையைத் தெரிவிக்கும் அவனது திருவுருவங்கள் பல. அவற்றுள், அவன் கங்கையைத் தரித்த திருவுருவம் ஒன்று.

சிவபெருமான் கங்கையைத் தரித்தது இருமுறையாகச் சொல்லப்படும்.

திருக்கைலையில் சிவபெருமான் உமையம்மையுடன் தனித்திருந்த காலத்தில் அம்மை விளையாட்டாகச் சிவபெருமானுக்குப் பின்பக்கமாக வந்து தனது இரு கைகளாலும் அவரது இரு கண்களையும் மூடினாள். சிவபெருமானது இரு கண்களே உலகிற்கு ஒளிதரும் சூரிய சந்திரர்களாதலின், அம்மை அக் கண்களை மூடியவுடன் உலகெங்கும் ஒளிநீங்க இருள்பரந்தது. அதனால், எண்ணற்ற உயிர்களும் இடர் உற்றன. அதனையறிந்த சிவபெருமான் நெற்றியில் நெருப்புமயமான ஒரு கண்ணைத் திறந்தார்; உலகில் இருள் நீங்கிற்று; ஒளி உண்டாயிற்று; உயிர்கள் இன்புற்றன. நெருப்புக் கண் திறந்ததைக் கண்ட அம்மை அச்சுற்றுச் சிவபெருமானது கண்களை மூடியிருந்த தனது இரு கைகளையும் விரைந்து வாங்கினாள். அச்சத்தால் அவளது கைகளில் வியர்வை உண்டாயிற்று; அதனை அம்மை உதறியபொழுது, அவளது கைவிரல் பத்தினின்றும் சிதறிய வியர்வை, பத்துக் கங்கைகளாய்ப் பெருக்கெடுத்துத் தேவருலகம் முதலான மூவுலகங்களினும்பெருகி அவற்றை அழிக்கத் தொடங்கிற்று. அதனைக் கண்டு அனைவரும் அஞ்சிய பொழுது, இந்திரன், பிரமன், திருமால் மூவரும் திருக்கைலையை அடைந்து முறையிட, அவர் அக்கங்கை அனைத்தையும் வருவித்துத் தம் சடையில் ஓர் உரோமத்தின் நுனியளவில் தங்கும்படி வைத்துத் தரித்துக்கொண்டார். கங்கையைத் தரித்த வடிவம், 'கங்காதர மூர்த்தம்' எனப்படுகின்றது. சிவபெருமான் திருமுன்பில் நின்ற இந்திரன், பிரமன், திருமால் என்னும் மூவரும் சிவபெருமானை வணங்கி, 'உமையம்மையினிடம் தோன்றி உமது சடையில் தரிக்கப் பெற்ற இப்புனிதமாகிய கங்கையை எங்கட்குச் சிறிது தரல்வேண்டும்' என வேண்டி, ஒவ்வொருவரும் சிறிது சிறிது பெற்றுச் சென்று தம் தம் உலகத்தில்விட, அவை அவரவர் உலகத்தில் ஆகாய கங்கைகளாய்ப் பெருகி விளங்குவவாயின. அவைகளில் பிரமலோகத்திலிருந்த கங்கையையே பகீரதன் தவம்செய்து பூமியிற் கொணர்ந்தான். அவ்வரலாறு வருமாறு:

பூமியில் சூரியகுலத்து அரசர்களில், 'சகரன்' என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புதல்வர் அறுபதினுயிரர். சகரன் ஒரு பரிமேத வேள்வீ (அசுவமேத யாகம்) செய்யத் தொடங்கித் தன்மக்கள் அறுபதினுயிரவரையும் அப்பரிமேதக் குதிரையின்பின் அனுப்பினுன். அவர்கள் எங்கும் வெற்றி பெற்றுச் செல்லுகையில், இந்திரன் இவர்களே வஞ்சிக்க நினைத்துத் தனதுமாயத்தால் குதிரையைக் கவர்ந்துகொண்டு சென்று பாதலத்தில் தவம் செய்திருக்கும கபிலமுனிவர் பின்னே கட்டிவிட்டுச் சென்ருன். சகர புத்திரர்கள் குதிரையை எங்கும் தேடிக்காணுமல் பாதலத்திற் சென்று கபிலமுனிவர் பின் இருக்கக் கண்டு, அம்முனிவரே வஞ்சனை யால் குதிரையை அங்குக கொண்டுசென்ருர் என்று நினைத்துச் சீற்றங்கொண்டு அவரது தவத்திற்கு இடையூறு விளைத்தனர். கண்விழித்துப்பார்தத கபிலமுனிவர், சகர புத்திரர்களைத் தம் தவவலிமையால் சாம்பராகச் செய்தார். நெடுநாட்களாகியும் குதிரை திரும்பி வாராமையைக் கண்ட சகரன் தன் மற்ருெரு புதல்வனுகிய அஞ்சுமானை அனுப்ப, அவன் சகர புத்திரர்களுக்கு நேர்ந்த கதையைக் கருடனுல் அறிந்து, பாதலத்திற் சென்று முனிவரை வணங்கிக் குதிரையை மீட்டுக் கொணர்ந்து தந்தையது வேள்வியை நிறைவேற்றினுன்.

அஞ்சுமான் கபிலரிடம் சென்றபொழுது நாரதமுனிவர் அங்குவந்து கபிலரது கோபத்தால் எரிந்து சாம்பரான சகரர்கள் அறுபதினுயிரவரும் நரகத்தில் உள்ளார்கள் என்றும், பிரமலோகததில் உள்ள ஆகாய கங்கையை அவர்களது சாம்பலின்மேல் வரச்செய்தால், அவர்கள் நரகத்தினின்றும் நீங்கிச் சுவர்க்கம் செல்வார்கள் என்றும் கூறிச் சென்ருர். ஆயினும் அதைச் செய்து முடிக்க வழி யறியாமல் அஞ்சுமான் முதலியோர் இருந்துவிட்டனர். அவர்கள் வழியில்வந்த 'பகீரதன்' என்னும் அரசன் பிரம தேவனை நோக்கிப் பல்லாண்டுகள் தவம செய்யப் பிரம தேவன் வெளிப்பட்டுத் தோன்றி, 'கங்கையை நோக்கித் தவம் செய்க' என்ருன். பின்பு அவன் கங்கையை

நோக்கிப் பல்லாண்டுகள் தவம் செய்தான். கங்கை ஒரு பெண்வடிவில் தோன்றி, 'நான் பூமிக்குவரின் எனது வேகத்தைத் தாங்கவல்லவர் சிவபெருமான் ஒருவரே; அதனால் உலகம் அழியாதவாறு என்னைத் தாங்குதற்கு அவரை நோக்கித் தவம்செய்க' என்றுசொல்லி மறைந்தாள். பகீரதன் சிவபெருமானைநோக்கிப் பல ஆண்டுகள் தவம் செய்தான். 'சிவபெருமான் தோன்றிக் கங்கை பூமிக்கு வரின் தாங்குவோம்' என்றுசொல்லி மறைந்தார். பின்பு பகீரதன் மீட்டும் கங்கையைநோக்கித் தவம் செய்ய, கங்கை பேராரவாரத்துடன் பூமியை நோக்கிப் பாய்ந்தாள். சிவ பெருமான் பகீரதனுக்குக் கொடுத்த வரத்தின்படி கங்கை முழுவதையும் தமது சடையில் ஒருமயிர்நுனியில் வைத்துக் கட்டினார்.

ஆரவாரத்துடன் கங்கைவருவதை யறிந்து மகிழ்ந்த பகீரதன், ஒன்றுமில்லாமற்போனதைக் கண்டு வருந்திச் சிவபெருமானை வேண்ட, அவர் தம் சடையினின்றும் ஒரு சிறு துளியை, 'இவ் வரசன்பின் செல்க' என விடுத்தார். கட்டு நீங்கிய கங்கை பகீரதன் பின்னே பேராரவாரத்துடன் சென்றாள். வழியில் இருந்த 'ஜந்நு' என்னும் முனிவர் தமது வேள்வி அழிந்துவிடும் என்று நினைத்து அக் கங்கையை ஆசமனமாக உண்டுவிட்டார். அது தெரிந்த பகீரதன் அம்முனிவரை வேண்டிக்கொள்ள, அவர் தமது காதின்வழியே சிறிது கங்கையை விடுத்தார். அதுவே பெரு வெள்ளமாய்ப் பகீரதன் பின்னே சென்று, சகரர்களது சாம்பலிற் பாய்ந்தது. அதனால், சகரர்கள் சுவர்க்கத்தை அடைந்தார்கள்.

> "மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
> சலமுகத்தால் அவன் சடையிற் பாயும்அது என்னேடி
> சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலனேல் தரணி
> [யெல்லாம்
> பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ"

என்னும் திருவாசகம் போதுப்பட நின்று, இவ்விரு வரலாற்றையும் குறித்தல் காணலாம். உமையம்மை கைவிரல்களி

னின்றும் தோன்றிய கங்கையைத் தரித்த நிலையை, 'கங்காதரமூர்த்தம்' என்றும், தரித்தகங்கையைப் பகீரதனுக்காகச் சிறிது விடுத்த நிலையை 'கங்கா விசர்சன மூர்த்தம்' என்றும் கூறுதல் உண்டு. "வெள்ளந்தாழ் விரிசடையாய்" என்னும் திருவாசகத் தொடரும் இவ்விருவகை மூர்த்தங்களையும் குறித்தற் குரியது. எவ்வாறெனில் 'தாழ்தல்' என்பதற்கு, 'தங்குதல், ஒழுகுதல்' என்னும் இருபொருளும் உண்டு. பகீரதன் கொணர்ந்தமையால் 'பாகீரதி' என்றும், ஜந்நு முனிவர் விடுத்தமையால், 'ஜங்கவி' என்றும் கங்கைக்குப் பெயர்கள் உண்டாயின.

இங்ஙனம் விண்ணுக்கடங்காமல், வெற்புக்கடங்காமல், மண்ணுக்கடங்காமல் வந்த கங்கையைத் தனது சடை ஒன்றில் ஒருமயிர் முனையில் நிற்கச்செய்து அடக்கியதும் பின்னர்ப் பகீரதன் பொருட்டுச் சிறிது விடுத்து முன்போலப் பெருகச் செய்ததும் ஆகிய செயல்கள் எவற்றைக்காட்டுகின்றன? அளவற்ற அதிவிசித்திரமான உலகங்களையெல்லாம் இறைவன் தனது இச்சைப்படியே ஒடுக்குவதும் பின் முன்போலவே விரிந்து கிடக்க உண்டாக்குவதும் ஆகிய அவனது அளவில்லாத அருளாற்றற் செயலையே குறிக்கின்றன. இன்னும் நீரின்றியமையா உலகங்கட்கெல்லாம் நீரையளித்துக் காப்பவனும் அவனே என்பதையும் தெரிவிக்கும். பருவ மழையை எதிர்நோக்கியிருக்கும் நாம், கங்காதர மூர்த்தியும், கங்காவிசர்ச்சன மூர்த்தியுமாகிய இறைவனை, 'வெள்ளந்தாழ் விரிசடையாய், விடையாய், விண்ணோர் பெருமானே' எனப் போற்றிப் புகழ்ந்து பயன் பெறுவோமாக.



உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

சமய நிலை

மக்கள் உலகியலில் முன்னேறப் பல வழிகள் இருப்பது போல, ஆன்மீகத் துறையில் முன்னேறுவதற்கும் பல வழிகள் உள்ளன; அவைகளே சமயங்கள். வழிகளில் இருவகை உண்டு. அவை ஓர் இடத்தையே நோக்கிச் செல்லும் பல வழிகள், ஒவ்வொன்றும் ஒவ்வோர் இடத்தையடையும் வழிகள் என்பன. இவ்வாறே சமயங்களிலும் இருவகை உண்டு; அவை, அனைத்துச் சமயங்களும் ஒரு பயனையே அடைவிப்பனவும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனை அடைவிப்பனவும் என்பன.

சமயங்களால் அடையப்படும் பயன், உலகின்பமும், வீட்டின்பமும் என இரண்டு. உலகின்பமும் இன்பமாயினும், அது, பெருந்துன்பங்கட்கிடையே உண்டாகும் மிகச் சிறிய இன்பமாகும். இத்துன்பங்கள் பிறப்பு இறப்புக்கள் உள்ள அளவும் நீங்கமாட்டா. வீட்டின்பம், பிறப்பும் இறப்பும் அற்றதில்லை; ஆதலின், அது, துன்பமற்ற, எல்லையில்லாத பேரின்பமாகும். ஆதலின், அறிவுடையோர் வீட்டின்பத்தையே பெரிதும் விரும்புவர். அதனால், அப்பயனை அடைவிக்கும் சமயங்கள், '**அகச் சமயம்**' எனப்படும். வீட்டின்பத்தைத் தரும் அகச் சமயங்கள் உலகின்பத்தைத் தரமாட்டா என்பதில்லை; உலகின்பத்தை விரும்புவார்க்கு அதனையும் அகச் சமயங்கள் தரும். அதனால், இவை, ஓரிடத்தையே அடையும் பல வழிகள் போல்வன.

வீட்டின்பத்தைத் தாராது உலக இன்பத்தை மட்டுமே தரும் சமயங்களும் உள்ளன. அதனுள்ளும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனையே தருமன்றி, எல்லாச் சமயங்களும், எல்லாப் பயனையும் தரமாட்டா. ஆதலின், அவற்றை அறிஞர்,

'புறச் சமயம்' என்பர். இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் இடத்தை அடைவிக்கும் வழிகள் போல்வன. இவ்விருவகைச் சமயங்களையும் பெரியோர்கள் அவ்வவற்றிற்குரிய முறையில் குறிப்படுதலைக் காணலாம்.

"ஒன்றதே பேரூர் வழிஆ றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தாரே"

என்கின்றார் திருமூலர். 'பெரிய ஊர் (நகரம்) ஒன்றே உள்ளது; அதற்கு ஆறுவழிகள் உள்ளன என்பது போலத் தான் ஆறு சமயங்களும் அமைந்துள்ளன' என்று இதனால் அவர் குறிப்பிட்டுள்ளார். 'இச் சமயங்கள் ஆறும் அகச் சமயங்களே' என்பது, அத் திருமந்திர நூலிலே தெளிவாகக் காணப்படுகின்றது.

அருணந்தி சிவாசாரியரும், சமயங்களைக் குறிப்பிடும் இடத்தில் பின்வருமாறு கூறுகின்றார்:

சுத்தவடி வியல்பாக உடைய சோதி
சொல்லியஆ கமங்களெலாம் சூழப் போயும்
ஒத்துமுடி யும்கூட ஓரி டத்தே,
ஒருபதிக்குப் பலநெறிகள் உளவா றுற்போல்;
பித்தர்குண மதுபோல ஒருகால் உண்டாய்ப்
பின்னொருகால் அறிவின்றிப் பேதை யோராய்க்
கத்திடும்ஆன் மாக்கள்உரைக் கட்டிற் பட்டோர்
கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார்.

இச்செய்யுளிலும், "ஒருபதிக்குப் பலநெறிகள் உளவாறுற் போல்", அஃதாவது, 'ஒருபயனை அடைவதற்குப் பல சமயங்கள் உள்ளன' எனத் திருமூலர் கூறியவாறே கூறப்பட்டுள்ளது. ஆயினும், 'அவ்வாறு அமைந்த சமயங்கள் எவை?' என்னும் வினாவிற்கு விடையாக, "சுத்தவடிவு இயல்பாக உடைய சோதி சொல்லிய ஆகமங்கள்" என விளக்கம் தரப்பட்டுள்ளது. 'இயல்பாகவே பாசங்களின் நீங்கிய தூய உணர்வினன் இறைவன்' என்பதும், 'அவன் உயிர்கள் பொருட்டு அருளிச்செய்த முதல் நூல்கள் வேதசிவாகமங்கள்'

என்பதும், 'அதனால் அவையே உயர் பெரும் பயனைத் தருவன" என்பதும், அங்ஙனமாதலின், அம் முதல் நூல்களையே நூல்களாகப் பற்றினோர் அவற்றிற்குப் பொருள்காணும் முறையில் சிறிது சிறிது வேறுபடினும், முடிவில் உயர் பயனை அடைபவராவர்' என்பதும் இச் செய்யுளின் முற்பகுதியிற் கூறப்பட்ட பொருள். எனவே, 'வேத சிவாகமங்களின் வழிநிற்கும் சமயங்கள் அகச்சமயங்கள்' என்பதும், 'அவையே ஓர் ஊருக்கு உள்ள பல வழிபோல அமைபவை' என்பதும் தெளிவாகும்.

'இறைவன் நூலாகிய வேத சிவாகமங்களைக் கொள்ளாது அவற்றோடு மாறுபட்டுத் தத்தமக்குத் தோன்றிய கருத்துக்களையே அமைத்துச் செய்த நூல்கள் சிறு பயனைத் தருமாயினும், பெரும் பயனைத் தரமாட்டா; ஆகலின், அவற்றின் வழிநின்று பெரும் பயனை அடைவோம் என்றல், தெற்கு நோக்கிப் பயணம் செய்து இமயத்தை அடைவோம் என்றல் போலாம்' என்பது, இச்செய்யுளின் பிற்பகுதியின் பொருள். "கனகவரை" என்றது இமயமலையையும், "கடல்" என்றது, குமரிக் கடலையும் என்க. எனவே, "கனகவரை குறித்துப் போய்க் கடற்கே வீழ்வர்" என்றது, வேத சிவாகமங்களோடு மாறுபட்டு நிற்கும் புறச் சமயிகளையேயாயிற்று.

நிலவழி, கடல்வழி, வான்வழி என்னும் மூவகை வழிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதனபோலத் தோன்றினாலும், அனைத்தும், "வானவெளி" என்னும் ஒன்றிலே இருத்தலால் ஒருவகையில் ஒன்றோடொன்று தொடர்புடையனவேயாம். அதுபோல, அகச்சமயங்களும், புறச்சமயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதனபோலத் தோன்றினாலும், அனைத்தும், 'நன்மை' என்னும் ஒன்றினையே அடிநிலையாகக் கொண்டு நிற்றலால், ஒருவகையில் தொடர்புடையனவேயாம். அது பற்றியே, 'எல்லாச் சமயங்களும் இறைவன் திருவுளப்படியே தோன்றின' எனவும், 'தோன்றி, அழியாது நிற்கின்றன' எனவும் பெரியோர் கூறுகின்றனர்.

"விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினால் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்"

என்ற அப்பர் திருவாக்கு அறியத்தக்கது.

" எச்சமயத் தோர்சொல்லும் — தீதொழிய நன்மை செயல் "

என்னும் ஔவையார் வாக்கால், எல்லாச் சமயங்களும் 'நன்மை' என்ற ஒன்றையே அடிநிலையாகக் கொண்டவை என்பது விளங்கும்.

எல்லாச் சமயங்களும் நன்மை அடைதலைக் குறித்தே எழுந்தமையால், அவற்றின் தகுதிக்கேற்ப அவை யாவும், 'நன்மை' என்னும் ஓர் உயர்ந்த மலை அடியிற் கால்வைத்து, சிறிது சிறிதாக மேல் ஏறி, அம்மலையின் உச்சியை அடைதற்குரிய படிவழிகளேயாதல் தெளிவு.

" பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்றுசென் றேறி "

என்ற தோத்திரத்திலும்.

" புறச்சமய நெறிநின்றும், அகச்சமயம் புக்கும்,
புகல்மிருதி வழிஉழன்றும், புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்,
அருங்கலைகள் பலதெரிந்தும், ஆரணநூல் படித்தும்,
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப்பொருளை மிகத்தெரிந்தும் சென்றால், சைவத்
திறத்தடைவர்; இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்ந்தார் "

என்று சாத்திரத்திலும், சமயங்கள் பலவும் படிவழியாய் இருத்தல் கூறப்படுதலைக் காணலாம். ஆகவே, எச்சமயமாயினும் அச்சமயத்தில் நிற்போர், பிற சமயங்கள் பொருந்துவன அல்ல என்று மறுப்பதில் காலத்தைச் செலவிடாமல், அச் சமயத்தில் சொல்லப்பட்ட ஒழுக்கத்தில் தவறாது நிற்பார்களேயானால், அதனாலாகும் பயனை எய்தி அப்பால் மேற்செல்லுதற்கு வழி உண்டாகும். " புறச்சமய நெறிநின்றும், அகச்சமயம் புக்கும் " என்றதனால், 'புறச்சமயங்கள் அகச்சமயத்திற்குப் படிகள்' என்பதும், 'அகச்சமயங்கள் வீட்டு நிலைக்குப் படிகள்' என்பதும் விளங்கும்.

முற்கால நிலை

சமயங்கள் பலவும், 'கொள்கை, ஒழுக்கம்' என்ற இரண்டைப் பெற்று விளங்கும். கொள்கையாவது, 'உலகம், உயிர், கடவுள், பிறப்பு, வீடு' முதலியவை பற்றி இது இது இன்ன இன்ன தன்மைத்து என்னும் முடிவுகள். ஒழுக்கமாவது, அக் கொள்கைகளில் தாம் அடையும் பயனைக் கொண்டவற்றை அடைதற்குரிய நடைமுறைகள். இவ்வகையில் ஒழுக்கத்தை வைத்தே சமயங்களைப் பிரித்துக் கூறுதல் முற்கால முறை. கொள்கையை வைத்துப் பிரித்துக் கூறுதல் பிற்காலமுறை. இம் முறையில் '**சைவம், வைணவம், சாத்தேயம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம்**' என்னும் ஆறுமே சமயங்கள் என முற்காலத்தில் சொல்லப்பட்டன. இவை ஆறும் அது அது வழிபடும் கடவுள் பற்றியே இவ்வாறு வகுக்கப்பட்டன.

சிவபெருமானை வழிபடும் சமயம் சைவம்; திருமாலை வழிபடும் சமயம் வைணவம்; சத்தியை வழிபடும் சமயம் சாத்தேயம்; கணபதியை வழிபடும் சமயம் காணாபத்தியம்; குமரனை (முருகனை) வழிபடும் சமயம் கௌமாரம். சூரியனை வழிபடும் சமயம் சௌரம். இச் சமயங்கள் யாவும் முதற்காலத்தில் அன்பு காரணமாக ஒவ்வொரு கடவுளைச் சிறப்பாக வழிபட்டனவேனும், தத்துவக் கொள்கையில் ஏறக் குறைய ஒரே வகையான கருத்துடையனவாகவே இருந்தன. தத்துவக் கொள்கையில் தமக்குள் இருந்த சிறு வேறுபாடுகளை இவை, பெரிதும் பாராட்டுதல் இல்லை. அதனால், இவை ஆறும் ஓர் ஊர்க்குப் பல திசைகளிலிருந்து செல்லும் பல வழிகள் போன்றன என்றே அக்காலத்தில் கருதப்பட்டன. "**அறிவினுல்மிக்க அறுவகைச் சமயத்து — அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து**" என்று சுந்தரரும் அறுவகைச் சமயங்களையும் ஒன்றுபடுத்தியே அருளிச்செய்தார்.

இவ்வாறாயினும் பிற்காலத்தில் இவற்றிற்குள் வேற்றுமைகள் வளரத் தொடங்கின. அதனால், பெரிதும் வேறுபட்டு நின்றது வைணவம் ஒன்றே. மற்றைய ஐந்தும் அத்துணை வேறுபாடின்றி ஒன்றுபட்டே நின்றன. அதனால், அவை பிற்காலத்தில் வேறு சமயங்களாக நில்லாமல், சைவம் என்ற ஒன்றிலே அடங்கிவிட்டன. இனி, அறுவகைச் சமயங்களில் சைவத்தை

ஒன்றாகக் கூறாது, அதை அனைத்திற்கும் பொதுவாக வைத்து, 'சௌமியம்' என்பதைச் சேர்த்து, 'அறு சமயம்' என்பதும் உண்டு. சோமனை வழிபடும் சமயம் சௌமிய சமயம்' சோமன் - சந்திரன்.

இடைக்கால நிலை

அன்பு காரணமாகச் செய்யும் வழிபாட்டளவில் வேத மதங்கள் வேறுபட்டு நின்ற காலத்தில் வேதத்திற்கு எதிராக, 'பௌத்தம், ஆருகதம்' என்னும் மதங்கள் தோன்றின. அவை கள் தொடக்கத்தில், உயிர்ப்பலியிட்டுச் செய்யும் யாகங்களைச் சீவகாருணியம் என்ற ஒன்றினால் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டெழுந்து, பின்னர்த் தத்துவக் கொள்கைகளைப் புதிய முறையில் வகுத்து வெளியிட்டு வேத மதங்கள் அனைத்திற்கும் நேர்மாறான சமயங்களாய் வளரத் தொடங்கின. அதனால் வேத மதங்களும் முன்கொண்டிருந்த கடவுள் வழிபாட்டோடு நில்லாமல், தம் தம் தத்துவக் கொள்கைகளை நுணுக்கமாக ஆராய்ந்து வெளியிடுவவாயின. அந்நிலையில் சமயங்கள் பெருகி, 'உலகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சை, மாயாவாதம், பாஞ்சராத்திரம்' என்னும் ஆறும் புறச் சமயங்கள் என்றும், 'சைவம் பாசுபதம், மாவிரதம, காளாமுகம், வாமம், வைரவம். என்பன அகச் சமயங்கள் என்றும் வழங்கப்பட்டன. இவற்றை, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு என்பவற்றால் அறியலாம்.

பிற்கால நிலை

தத்துவக் கொள்கை பெரிதும் வளர்ச்சியுற்றுச் சிறப்புப் பெற்ற காலத்தில், சமயங்களை, 'புறப்புறம், புறம், அகப்புறம், அகம்' என நான்காக வகுத்து, ஒவ்வொன்றிலும் ஆறு சமயங்கள் கொள்ளப்பட்டன. 'வேதம், சிவாகமம்' என்னும் இரண்டனுள் ஒன்றையும் உடன்படாத சமயங்கள் புறப்புறச் சமயங்கள். அவை, 'உலகாயதம், மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம்' என்பன. இவற்றுள் மாத்தியமிகம் முதலிய நான்கும் பௌத்தத்தின் உட் பிரிவுகள். 'ஆருகதம்' என்பது சமணம். இவை வேதம், ஆகமம இரண்டினுள் ஒன்றையும் உடன் படாதவை.

'தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம்' என்னும் ஆறும் புறச் சமயங்கள். இவை வேதத்தை உடன்படும்; சிவாகமத்தை உடன்பட மாட்டா. தருக்க மதத்தில், 'வைசேடிகம், நையாயிகம்' என்ற இருபிரிவு உண்டு. மீமாஞ்சை மதத்தில், 'பட்டாசாரிய மதம், பிரபாகர மதம்' என இரண்டு பிரிவு உண்டு. ஏகான்ம வாதத்தில், 'மாயா வாதம், பாற்கரிய வாதம், கிரீடாப்பிரம வாதம், சத்தப்பிரம வாதம்' என நான்கு பிரிவு உண்டு.

'பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம்' என்னும் ஆறும் அகப்புறச் சமயங்கள். இவை வேத சிவாகமங்களை உடன்படினும், அவற்றோடு வேறு சில நூல்களையும் இன்றியமையாதனவாகக் கொள்ளும்.

'பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம்' என்னும் ஆறும் அகச்சமயங்கள். இவை வேத சிவாகமங்களையே நூல்களாகக் கொள்ளினும், தத்துவக் கொள்கையில் சிறிது சிறிது வேறுபடும். 'சுத்த சைவம்' என்பதும் ஒன்று உண்டு. இவை அனைத்திற்கும் மேலானது சித்தாந்த சைவம் அல்லது சைவ சித்தாந்தம். முன் சொல்லிய சமயப் படிகள் அனைத்தையும் கடந்து சைவ சித்தாந்தத்தை அடைவோர் மிகச் சிலரே என்பதை,

"ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே"

எனக் கூறினார் குமரகுருபரர்.

இங்குக் காட்டிய புறப்புறச் சமயம், புறச்சமயம் என்பவை சிவஞான சித்தியார் பரபக்கத்துள் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" என்னும் சுபக்கச் செய்யுளிலும், "புறச் சமயத்தவர்க்கிருளாய், அகச்சமயத் தொளியாய்" என்னும் சிவப்பிரகாசச் செய்யுளிலும், 'புறப்புறம், புறம், அகப்புறம்' என்னும் முக்கூற்றுப் புறச்சமயங்களும் கொள்ளப்படுகின்றன.

அகச் சமயங்கள் பற்றிய கருத்துக்களைச் ''சங்கற்ப நிராகரணத்துள்' காணலாம்.

நம் நாட்டுச் சமயங்கள் இங்ஙனம் பலவகையாய் இருக்க, அண்மைக் காலத்தில் வெளிநாட்டிலிருந்து கிறித்துவம், இசுலாமியம் என்னும் நவீன சமயங்களும் நம் நாட்டிற்கு வந்தன. இவை அனைத்திலும், 'உலகாயதம்' எனப்படும் ஒன்றைத் தவிர, ஏனைய யாவும் ஆத்திக மதங்களே. அவைகளைப் பின்பற்றுவோர் பிற மதங்களின் குறையைக் காண்பதில் காலத்தைக் கழியாது தம் மதங்களில் சொல்லப்பட்ட ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பதில் காலத்தைப் பயன்படுத்தினால், உண்மை உணர்ந்து, என்றும் அழியா நன்மையைப் பெறலாம். மேன் மேல் உள்ள சமயங்கட்குக் கீழ்க்கீழ் உள்ள சமயங்கள் படிவழியாய் இருத்தலால், மேல் உள்ள சமயங்கள் கீழ் உள்ள சமயங்களை விலக்காது, அச் சமயங்களில் உள்ள ஒழுக்கங்களை அச்சமயத்தவர் கடைப்பிடிக்க வேண்டும் என்றே விரும்பும். அங்ஙனமே சைவ சித்தாந்தமும், ஏனைய எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு அவற்றின் ஒழுக்கங்களை அவரவரும் கடைப்பிடித்தற்கு ஆவன செய்யும். காலநிலைமையால் சமயப் பற்றுக் குறைந்து காணப்படும் இந்நாளில், மக்கள் யாதேனும் ஓர் ஆத்திக சமயத்தின்வழி நிற்றற்கு ஆவன செய்தல், ஆத்திக சமயங்கள் அனைத்திற்கும் இன்றியமையாக் கடனாகும். அதற்குத் திருவருள் துணைசெய்வதாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

ஸ்ரீ பாலாம்பிகை சமேத ஸ்ரீ காலசம்காரமூர்த்தி, ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமியைத் தரிசனம் செய்துகொண்டு பெரும்பேறுபெற்றோம். தேவஸ்தானம் சிறந்த நிர்வாகம் கண்டு மகிழ்ந்தோம். தருமபுர ஆதீன கர்த்தாவின் தவச் சிறப்பையும், நிர்வாகத் திறமையையும் போற்றுகிறோம்.

(S-d) C. V. R. M. ராமசாமி செட்டியார் கானாடுகாத்தான்

(S-d) G. சுப்பையா செட்டியார்

(S-d) S. முத்தையா செட்டியார் புதுச்சேரி

3—1—67

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 7, பக்கம் 370 இன் தொடர்ச்சி)

முதல் வினை

மாணாக்கன் : ஒருவினையை அனுபவிக்கும்பொழுதே மற்றொரு வினை தோன்ற. இவ்வாறு நாசோற்பத்தியாய் வருதலால், வினை தொடர்ச்சியாய் வருகின்றது என்பது பொருத்தமாகின்றது. ஆயினும், உயிர்களுக்கு முதற்கண் வினை எவ்வாறு உண்டாகின்றது ? அஃதாவது, எல்லா உயிர்களும் அநாதியில் ஆணவமலத்திலே கட்டுண்டு, யாதும் அறியாது இருளில் அழுந்திக் கிடப்பதாகிய கேவல நிலையிலே உள்ளன. அவற்றிற்கு இறைவன் கருவிகரணங்களைக் கூட்டி அவைகளைச் சகல நிலையில் செலுத்துகின்றான் என்று அருளிச்செய்தீர்கள் ; கேவல நிலையில் கருவி கரணங்கள் இல்லாமையால், உயிர்கள் வினையைச் செய்தல் இயலாது ; ஆகவே, அந்நிலையில் அவைகட்கு வினை ஏது ? வினை இல்லாதபொழுது எதன்வழி இறைவன் எவ்வுடம்பைக் கூட்டுவிப்பான் ? இது, விளங்காத ஒன்றாய் உள்ளது ; இதனை விளக்கியருளல் வேண்டும்.

ஆசிரியர் : மேற்போக்காகப் பார்க்கும்பொழுது இது விளங்காத ஒன்றுதான். ஆயினும், தத்துவங்கள் பலவற்றையும் உணர்ந்து நுட்பமாக நோக்கினால், இது விளங்குவதாகும்.

'உயிர்களுக்கு வினைக்கீடான உடம்பே கொடுக்கப்படும்' என்பதில், 'உடம்பு' என்பது, தூலதேகத்தையே (பருவுடம்பையே) ஆகும். தூலதேகம், கண்ணுக்குப் புலனாவது, தூலதேகத்தில்தான், மக்கள், விலங்கு, பறவை, தாவரம் முதலிய வேறுபாடுகள் உள்ளன. தூல தேகத்திற்கு வேறாய்ச் சூக்கும தேகம் (நுண்ணுடம்பு) உண்டு ; அது கண்ணுக்குப் புலனாகாது. அதன்கண் இவ் வேறுபாடுகள் இல்லை. ஆகவே, 'வினைக்கேற்ப உயர்ந்ததும், தாழ்ந்ததுமாகக் கொடுக்கப்படும் உடம்புகள்' என்பன தூல தேகங்களேயாம். ஆணவ மலத்தால்

கட்டுண்டு கேவல நிலையில் கிடக்கும் ஆன்மாக்கட்கு இறைவன் முதற்கண் சூக்கும தேகத்தையே கூட்டுவிப்பான். அதில் உயர்வு தாழ்வு இல்லை. சூக்கும தேகத்தினால் சிறிது அறிவும், இச்சையும், செயலும் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள், தத்தம் தகுதி நிலைக்கேற்ப நல்லனவும், தீயனவு மாகிய செயல்களை அறிந்தும், இச்சித்தும் செய்ய முயலும். அம் முயற்சியே அவைகட்கு வினையாய் அமையும். அவ்வினைக் கேற்ற தூலதேகத்தை இறைவன் அவைகட்குக் கூட்டுவிப்பான். அதன்பின்னர்க் காரணகாரியத் தொடர்ச்சியாய்ப் பிறப்புக்கள் தொடர்ந்து நிகழும். தூலதேகம், சூக்கும தேகம் முதலிய வற்றின் இயல்புகளெல்லாம் மாயையைப் பற்றிக் கூறுமிடத்தில் தெளிவாக விளங்கும்.

மாணாக்கன்: 'முதற்கண் சூக்கும தேகம் வரும்பொழுது, ஒவ்வோர் ஆன்மாவும் தன்தன் தகுதிக்கேற்ப ஒவ்வொன்றை இச்சிக்கும் - விரும்பும்' என்று கூறினீர்கள்; அத் தகுதி என்பது யாது?

ஆசிரியர்: 'உயிர்கள் யாவும் தூல அறிவு உடையன' என்பது, அவை அனைத்திற்கும் பொதுத் தன்மையாயினும், அத் தூல அறிவும், உயிர்தோறும் வேறு வேறாகவே உள்ளது. அவ் வேறுபாடே அவற்றிற்குச் சிறப்பியல்பு. அச் சிறப்பியல்பு கட்கேற்ப ஆணவ மலப் பிணிப்பும் உயிர்தோறும் வேறுவேறு வகையாகவே உள்ளது. எல்லா உயிர்களும் ஒரு காலத்திலே வீடுபெறாமல், வேறு வேறு காலத்தில் வீடு பெறுதற்கும், 'விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்' என்னும் பிரிவுகட்கும் ஆணவ மல பந்தத்தின் வேறுபாடே காரணம். விஞ்ஞானகலர் முதலிய பிரிவு ஒவ்வொன்றிலும் உள்ள உயிர்களிலும் உயிர் தோறும் ஆணவ மல பந்தம் வேறு வேறு வகையாகவே உள்ளது. அந்த பந்தத்தின் வேறுபாடுதான், 'தகுதி அல்லது பக்குவம்' என்பது. சூக்கும தேகம் கிடைத்தவுடன் உயிர்கள் அவற்றின் இத் தகுதிகட்கேற்பவே அறிவு விளங்கப்பெறும். அவ்விளக்கத்திற்கீடாகவே இச்சையும், முயற்சியும் நிகழும். அதனால் உயிர்தோறும் வினைகளும் வேறுவேறாய் அமையும். அவ்வினைகட்கேற்பவே அவையும் வேறு வேறு பிறப்பினை அடையும் என்று உணர்வாயாக.

மாயா மலம்

மும்மாயை

மாணாக்கன்: 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களுள் ஆணவம், கன்மம் என்பவைகளைப் பற்றி

விரித்து அருளிச்செய்தீர்கள்; இனி எஞ்சியுள்ள மாயையைப் பற்றியும் அவ்வாறு அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர்: 'உலகிற்கு முதற்காரணம் மாயையே' என்பதை முன்பே கூறினோம். இவற்றினின்றும் நேரே தோன்றும் காரியங்கள், 'தத்துவங்கள் அல்லது கருவிகள்' என்று சொல்லப்படும். 'தத்துவம்' என்பதற்குப் பிற மதங்களில், 'பொருள்' என்பதே கருத்து. சைவ சித்தாந்தத்துள், 'தத்துவம்' என்பதற்கு, 'கருவி' என்பதுதான் பொருள்.

மாயையினின்றும் முதற்கண் தத்துவங்களே தோன்றும்; பின்பு, தத்துவங்களின்றும் உலகம் தோன்றும். தத்துவங்களினின்றும் தோன்றுவனவற்றிற்கு, 'தாத்துவிகம்' என்பது பெயர். தத்துவங்களினின்றே உலகம் தோன்றுதலால், உலகத்திற்கு நேரே முதற்காரணமாய் இருப்பவை தத்துவங்களே. தத்துவங்கள் மாயையின் காரியங்களாதலின், உலகிற்கு முடிவான முதற்காரணம் மாயை.

உயிர்கள் மூன்று வகையினவாய் இருத்தலால், அவற்றின் பொருட்டு அமைந்த உலகமும் மூன்று வகையின. அவை, 'தூய உலகம், கலப்புலகம், மாசுலகம்' என்பன. அவை முறையே, 'சுத்தப் பிரபஞ்சம், மிச்சிரப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம்' எனப்படும். சுத்தம், அசுத்தம் என்றல், மயக்கத்தைத் தராமையும், மயக்கத்தைத் தருதலும் பற்றியாம். ஆகவே, சுத்தப் பிரபஞ்சம் மயக்கத்தைத் தாராது. மிச்சிரப் பிரபஞ்சம், சிறிதே மயக்கத்தைத் தரும்; அசுத்தப் பிரபஞ்சம் மயக்கத்தையே தரும் என்பது புலனாகும். 'மூவுலகம்' என்பதற்குச் சைவ சித்தாந்தத்திற் கொள்ளப்படும் உண்மைப் பொருள், இங்ஙனம் சொல்லப்படும் மூவகை உலகங்களேயாம்.

காரியமாய் உள்ள உலகம் இவ்வாறு மூவகைப்பட்டிருத்தலால், இவற்றிற்குக் காரணமான மாயையும் மூன்றாய் இருக்கும் என்பது தெளிவு. அம்மூன்றும் முறையே, 'சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை' எனப்படும்.

உலகில் பலவகையாகக் காணப்படும் பொருள்களாய்ப் பரிணமிக்கக் கூடிய பலவகைச் சத்திகளின் தொகுதியே, 'மாயை' எனப்படுவது. அச் சத்திகள் உயிர்களைப் பற்றுமிடத்து அவ்வுயிர்களிடத்து இயற்கையாய் உள்ள ஆணவ பந்தத்தினால், சுத்தமும், மிச்சிரமும், அசுத்தமுமாகிவிடும்.

எனவே, மாயை சுத்தமாய் இருந்து மயக்கத்தைத் தாராதொழி வதற்கும், அசுத்தமாய் நின்று மயக்கத்தைத் தருவதற்கும் ஆணவ பந்தத்தினது மென்மை வன்மைகளே காரணமாம். மாயைக்கு இயல்பாய் உள்ள தன்மை, விளக்கத்தைத் தருவதே. ஆயினும், அது மயக்கத்தைத் தருவது, ஆணவத்தின் சார்பி ஞலேயாம். இது, தித்திப்பதாகிய பால், புளிப்புடைய பொரு ளோடு கூடுமாயின், புளிப்பையுடைய தயிராகி விடுதல் போல்வது.

'விஞ்ஞாகலர்' என்னும் ஒருமலம் உடையவர்களை ஆணவம் மென்மையாகப் பற்றியிருத்தலால், அவர்களை அடை கின்ற மாயை அசுத்தமாய் மயக்கத்தைச் செய்யாது, சுத்த மாகவே இருக்கும். 'பிரளயாகலர்' என்னும் இருமலம் உடைய வர்களை ஆணவம் இடைநிலையாகப் பற்றியிருத்தலால். அவர்களை அடைகின்ற மாயை சிறிதே அசுத்தமாகிச் சிறிதே மயக்கத்தைச் செய்யும். 'சகலர்' என்னும் மும்மலம் உடைய வர்களை ஆணவம் வன்மையாகப் பற்றியிருத்தலால். அவர்களை அடைகின்ற மாயை அசுத்தமாகி, மயக்கத்தைச் செய்யும். எனவே, ஒன்றேயாகிய மாயை, ஆணவ பந்தத்தின் வேறு பாட்டிஞல், 'சுத்தம், மிச்சிரம், அசுத்தம்' என மூன்ருகி விடுகின்றது என்பதை உணரலாம். இங்ஙனம் கூறியவாற்ருல், சுத்தப் பிரபஞ்சம் விஞ்ஞாகலர்க்கும், மிச்சிரப் பிரபஞ்சம் பிரளயாகலர்க்கும், அசுத்தப் பிரபஞ்சம் சகலர்க்கும் உரியன என்பது பெறப்படும்.

இன்னும் உண்மையாக நோக்கிஞல், 'ஒருமலம் உடையவர், இருமலம் உடையவர், மும்மலம் உடையவர்' என்பது, மேற் கூறிய மயக்கம் இல்லாமையும், மயக்கம் இருத்தலும் பற்றியே யாம். அஃதாவது விஞ்ஞாகலர்க்கு ஆணவ பந்தம் மென்மை யாய் இருப்பதால், அவர்களுக்கு உள்ள கருவி கரணங்கள் மயக்கத்தைச் செய்வதில்லை. ஆகவே, அவற்றைக் கொண்டு ஈட்டியும் நுகர்ந்தும் வரும் வினைகளும் மயக்கத்தைச் செய்யா. அது பற்றி அவர்கட்கு மாயை கன்மங்கள் இல்லை என ஆகமங் கள் கூறுகின்றனவேயன்றிச் சுத்தமாயையும், சுத்தகன்மமும் இல்லை என்னும் கருத்திஞல் அன்று. இன்னும், 'விஞ்ஞா கலர் பிரளயாகலர்கட்கு மயக்கம் இல்லை' என்பதற்கும், 'சகலர்க்கு உள்ள மயக்கம் போன்ற மயக்கம் இல்லை' என்பதே கருத்தாம். ஆணவபந்தம் சிறிதேனும் உள்ளவரையில் மயக்கம் சிறிதாயினும் உளதாகுமேயன்றி அறவே நீங்காது. நீங்கு மெனின், விஞ்ஞாகலராகும் நிலையே முத்தியாய்விடும். அது

பொருந்தாமையால், விஞ்ஞானகலர்க்கு, 'மாயை கன்மங்கள் இல்லை' என்பதற்குப் பொருள், 'அசுத்த மாயையும், அசுத்த கன்மமும் இல்லை' என்பதேயாம். இஃது இனிது விளங்குதற் பொருட்டே சுத்தமாயையை 'மாயை' என்று குறியாது, 'விந்து' என்றே குறித்தும், அசுத்த மாயையையே அடைமொழி யின்றி, 'மாயை' என்றே குறித்தும் சொல்லுதல் பெரும்பான்மை வழக்காய் உள்ளது. சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இரண்டையும் இரண்டு தனிப்பொருள் போலக் கூறுதலும் இது பற்றியேயாம். 'பிரளயாகலர்க்கு மாயை இல்லை' என்பதற்கும் இவ்வாறு, 'அசுத்த மாயை இல்லை' என்பதே பொருளாகும்.

இவ்வாற்றால் சகலர்க்கு உரிய பிரகிருதிமாயையே உண்மை யில் அசுத்த மாயை. ஆயினும், அஃது இயற்கையில் அவ்வாறு அமையாது, மிச்சிர மாயையின் பரிணாமமாய் அமைவதால், அது தனித்த ஒரு மாயையாகக் கூறப்படாமல் 'பிரகிருதி' என்னும் தத்துவமாகக் கூறப்படுகின்றது. எனவே, 'அசுத்த மாயை' எனக் குறியிட்டு வழங்கப்படும் மாயை உண்மையில், மிச்சிர மாயையே.

மும்மலம் உடைய சகலர்க்குச் சுத்தமாயா தத்துவங்களோடு தொடர்பில்லை. ஆயினும், மிச்சிரமாயா தத்துவத்தோடு தொடர்பு உண்டு. அதுபற்றியும் மிச்சிரமாயை, 'அசுத்த மாயை' எனக் கூறப்படுகின்றது.

சுத்தமாய் உள்ளபொருள் அசுத்தமாகுமாயின், அது தனது வியாபகத்தை இழக்கும். ஏனெனில், அசுத்தமாவது ஆணவத்தின் தொடர்பே. ஆணவத்தின் இயல்பு அணுத் தன்மையைச் செய்வது; அதனால், ஆணவத்தைச் சார்ந்த பொருள் தனது வியாபகத்தை இழப்பதாகின்றது. அதனால், சுத்தமாயை வியாபகமும், அசுத்த மாயை அதில் வியாப்பியமும் ஆகும். அதனால், சுத்த மாயையை, 'ஊர்த்துவ மாயை' என்றும், அசுத்த மாயையை, 'அதோ மாயை' என்றும் சொல்லப்படும். ஊர்த்துவம் – மேல். அத: – கீழ். 'மேல், கீழ்' என்பன, இங்கு வியாபக வியாப்பியங்களைக் குறிக்கும். வியாபகம் – விரிவு. வியாப்பியம் – அடக்கம்.

'ஊர்த்துவ மாயை, மகாமாயை, குடிலை, விந்து' என்பன, சுத்த மாயையின் வேறு பெயர்கள். 'அதோ மாயை, மாயை, மோகினி' என்பன, அசுத்த மாயையின் வேறு பெயர்கள். 'மான், அவ்வியத் தம்' என்பன, பிரகிருதிமாயையின் வேறுபெயர்கள். இவ்வாறு மும்மாயைகளையும் நன்குணர்தல் வேண்டும். (தொடரும்)

திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல்

வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 26, இதழ் 5, பக்கம் 279 இன் தொடர்ச்சி)

(5) மெய்ப்பொருள் நாயனார்

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்"

— திருத்தொண்டத் தொகை.

"கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் [காய்சினத்தால்
செற்றவன் தன்னை யவனைச் செறப்புக வந்திடுவாய்
மற்றவன் தத்தா நமரே எனச் சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாமென்று பேசுவரே."

— திருத்தொண்டர் திருவந்தாதி.

நடு நாட்டின் உட்பகுதியாகிய சேதிநாட்டின் தலைநகர் திருக்கோவலூர். அந்நகரில் மலாடர் என்ற மரபினைச் சேர்ந்தோர் அரசு செலுத்தி வந்தனர். இம் மரபினர் சிவநெறியில் சிறந்து விளங்கினர். அடியவர்களைப் பணிந்து அவர்கள் ஏவல் செய்யும் இயல்பினராய் ஒழுகிவந்தனர்.

மெய்ப்பொருள் நாயனார் :

மலாடர் மரபில் தோன்றி அடியார்களின் திருவேடங்களையே மெய்ப்பொருள் எனக் கருதியதால் மெய்ப்பொருள் நாயனார் என்று பெயர் பெற்ற இவர் தோள் வலியோடு பகைவரைப் போரில் வென்று வெற்றி வீரராக விளங்கினர். சிவபிரான் எழுந்தருளியுள்ள கோயில்களிலெல்லாம் வழிபாடு திருவிழா முதலியன நடைபெறப் பொருளுதவினர். தாம் பெற்ற செல்வங்களனைத்தும் சிவனடியார்களுக்கே உரியன என்று கருதி அடியார்கள் வேண்டிய பொருள்களைக் கொடுத்துவந்தார்.

" தேடிய மாடுநீடு செல்வமும் தில்லைமன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகுமென்று
நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்தபோதில்
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்துவந்தார் "

முத்தநாதன் பகைமை :

இங்ஙனம் மெய்ப்பொருள் நாயனார் அடியார் பக்தி கொண்டு ஆட்சி செய்து வருங்காலத்தில் முத்தநாதன் என்ற அரசன் இவர்பால் பகைமை கொண்டு இவரைப் போரில் வெற்றிகொள்ள எண்ணினான். பலமுறை போர் செய்தும் வெற்றி பெற முடியாது படைகளை இழந்து தோற்றான். தோல்வியால் அவமானமடைந்தான்.

போய்த்தவவேடம் :

பலமுறை தோற்று அவமானமடைந்த முத்தநாதன் போரில் இவரை வெல்ல முடியாது என்பதை உணர்ந்து, இவர் அடியார்களிடத்து அன்பு கொண்டிருப்பதை அறிந்து பொய்த்தவ வேடம் புனைந்து வெல்ல எண்ணினான். திருநீற்றினை மெய்முழுதும் பூசிக்கொண்டு சடைகளைப் புனைந்து முடித்து உடைவாளைப் புத்தகக் கவளி ஒன்றில் ஒளித்துக்கொண்டு வஞ்சக எண்ணங்கொண்டு மெய்ப்பொருள் நாயனார் வாழும் அரண்மனைக்குள் நுழைந்தான்.

" மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டிக்
கையினில் படைகரந்த புத்தகக் கவளியேந்தி
மைபொதி விளக்கேயென்ன மனத்தினில் கறுப்புவைத்துப்
பொய்தவ வேடங்கொண்டு புகுந்தனன் முத்தநாதன் "

வாயில் காவலர் சிவனடியார் என்று எண்ணி வழிவிட்டனர். அப்போது மெய்ப்பொருள் நாயனார் உறங்கிக்கொண்டிருந்தார். அவர் இருக்குமிடத்தைக் காவல் செய்தவன் தத்தன் என்ற காவலன். அவன், வந்த புதிய சிவனடியாரைப் பார்த்து அரசர் நித்திரையில் ஆழ்ந்திருப்பதால் சமயமறிந்து தாங்கள் செல்ல வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டான். தத்தன் உரை கேட்ட முத்தநாதன், நான் அரசனுக்கு வீடுபேறு அளிக்கத்தக்க உறுதிப் பொருள் கூற வந்துள்ளேன். என்னைத் தடை செய்யாதே என்று கூறி உள்ளே சென்றான். உறங்கும் மன்னன்

அருகில் அரசமாதேவி அமர்ந்திருந்தாள். சிவனடியார் வருகையைக் கண்ட அம்மையார் எழுந்து, தம் கணவரை எழுப்பினர். எழுந்த நாயனர் அடியவரை வணங்கி வரவேற்ருர். வந்த காரியத்தை வினவினர். முத்தநாதன் சிவபிரான் அருளிய ஆகம நூல் ஒன்று என்னிடமுள்ளது. இதுவரை வெளிவராதது. அதனை உனக்குப் போதிக்கவந்துள்ளேன்; என்று கூறினன்.

மெய்ப்பொருள் நாயனர் இதனைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார். ஆகமப் பொருளை அருளிச் செய்ய வேண்டுமென்று வேண்டினர். உடனே முத்தநாதன் அரசமாதேவி அருகில் இருத்தல் கூடாது. நாம் தனியே வேறிடத்தில் இருக்க வேண்டுமென்று கூறினன்.

நாயனர் தம் தேவியாரை அந்தப்புரம் போகுமாறு அனுப்பினர். பொய்த்தவ வேடம் புனைந்த அவ்வடியவரை உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தித் தான் நிலத்தில் இருந்துகொண்டு உபதேசம் செய்யுமாறு வேண்டினர். முத்தநாதன் புத்தகக் கவளியை மடிமீது வைத்து அவிழ்த்து நாயனர் தம்மை வணங்கும் வேளைபார்த்து உடைவாளை எடுத்து தான் நினைத்துவந்த அக் கொடிய செயலைச் செய்து முடித்தான். அந்நிலையிலும் நாயனர் மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் என்று கருதி அவ் வஞ்சகனை வணங்கினர்.

" கைத்தலத்திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல்வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் [போதில்
பத்திரம் வாங்கித்தான்முன் நினைந்த வப்பரிசேசெய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது [வென்ருர் "

தத்தாநமா :

புதிய சிவனடியார் மன்னனைக் காணச் சென்றது முதல் அங்கேயே தன் மனத்தை வைத்திருந்து தத்தன் ஐயுற்று உள்ளே சென்ருன் நிலைமையை உணர்ந்து முத்தநாதனை வெட்டுதற்கு ஓடினன் அந்நிலையில் நாயனர் அவனைத் தடுத்து, 'தத்தா நம்மவர். அவரை ஒன்றும் செய்யாதே; எவரும் இவரைத் தடை செய்யாதபடிக் காவல் புரிந்து கொண்டுபோய் விட்டுவிடுக' என்று கூறினர்.

முத்தநாதனிழைத்த தீய செயலை அறிந்தோர் பலரும் அவனைக் கொலை செய்தற்குச் சூழ்ந்து கொண்டனர். தத்தன் அவர்களைத் தடுத்து, முத்தநாதனை நகருக்கு அப்பாலழைத்துச் சென்று இடையூறு ஏதும் இல்லாத இடத்தில் விட்டுவிட்டு நாயனாரிடம் வந்து கட்டளையை நிறைவேற்றியதைத் தெரிவித்து நின்றான். 'அந்நற்சொல்லைக் கேட்பதற்காகவே உயிர் காத்திருந்த நாயனார், தத்தனைப் பாராட்டி, உறவினர்களை அழைத்துத் தமக்குப்பின் அரசாளுதற்குரியோரை நியமித்து நீங்கள் திருநீற்றினிடத்து வைத்த அன்பைப் பாதுகாத்து, நாட்டை அரசாளுக' என்று உறுதிமொழி கூறிச் சிவபிரான் திருவடிகளையே சிந்தித்திருந்தார்.

அப்போது ஸ்ரீ நடராசப்பெருமான் எழுந்தருளிவந்து நாயனார்க்கு அருட் காட்சி வழங்கித் தம் திருவடி நீழலை அடைந்து திருநடம் கும்பிடும் பெரும் பேற்றை அளித்து அருள் புரிந்தார்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

This is my first visit to Tirucadayur with its holy associations with Markandar and Abirami Battar. I was impressed with the cleanliness with which the temple precincts have been maintained, and which I have seen in Sirkali and Vaithiswarankoil.

One must greatly appreciate the yeoman Service that is having done by the Dharmapuram Adhinam in this regard - which temples elsewhere not only in the south but also other parts of India would do emulate.

(Sd.) S Venkataraman.

7—4—67.

Collector of
Central Excise, Madras.

அஞ்சுள சிங்கம்

சி. அ

உலகில் உள்ள பிறப்புக்களில் கொடுமை வாய்ந்த பிறப்பாகக் கருதப்படுவது மிருகப் பிறப்பு. மக்களிலும் கொடுமையுடையவர்களை—பண்பாடு இல்லாதவர்களை, 'மிருகத் தன்மையுடையவர்கள்' என்று கூறுதல் வழக்கம். மிருகங்களிலும் நாட்டில் மக்களுடன் வாழும் மிருகங்கள் ஓரளவு அமைதியும், பண்பும் உடையனவாய் இருக்கும். காட்டில் வாழும் மிருகங்கள் அவ்வாறின்றி, மிகவும் கொடியனவாய் இருக்கும். காட்டு மிருகங்களில் யானை சாக பட்சிணியே; மாமிச பட்சிணியன்று. இருப்பினும், காட்டு யானைகள் கொடிய சுபாவம் உடையவைகளே என்பது யாவரும் அறிந்தது. சாக பட்சிணியான மிருகமே கொடியதாய் இருக்கிறதென்றால், மாமிச பட்சிணிகளான மிருகங்கள் எவ்வளவு கொடியவையாய் இருக்கும்!

'கரடி, புலி, சிங்கம்' என்பன கொடிய மிருகங்களில் முதன்மையானவை. அவைகளிலும் சிங்கமே தலைமையானது. சிங்கத்தை வேறு எந்த மிருகமும் வெல்லாது; சிங்கம் ஏனைய எல்லாவற்றையும் வென்றுவிடும். அதனால் சிங்கத்திற்கு, 'மிருகேந்திரன்' என்ற பெயரும் உண்டு.

ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தாலே அங்குள்ள மற்ற மிருகங்களுக்கும், அருகில் வாழும் மனிதர்களுக்கும் உண்டாகின்ற அச்சத்திற்கும், துன்பத்திற்கும் அளவில்லை. ஐந்து சிங்கங்கள் ஒருகாட்டில் வாழுமானால், சொல்லத் தேவை இல்லை. சிங்கத்திற்கு மற்ற மிருகங்களையும், மக்களையும் அடித்துக் கொன்று வெற்றிபெறுதற்கு ஆயுதமாக அமைந்திருப்பவை, அதன் உறுதியான கூரிய நகங்களும், பற்களுமாம். சிங்கம் கொடிய மிருகமாயினும் அதைக் கொல்வதும் பாவந்தான். ஆகையால் சிங்கத்தைப் பிடித்து, அதன் நகத்தையும், பற்களையும் அறுத்துவிட்டால் துன்பம் ஏதும் இல்லை. பின்பு அது

நாம் சொன்னபடி கேட்கும்; கொடுத்த உணவை உண்டு வாழும்; முன்போலக் கொழுத்துத் திரிதல் இயலாது.

இப்படி ஓர் ஐந்து சிங்கங்கள் ஒரு காட்டிலே வாழ்கின்றன என்றும், அவைகள் ஐந்து குகைகளில் வாழ்கின்றன என்றும், வெளியேபோய் மேய்ந்துவிட்டு மீண்டும் அந்த ஐந்துகுகைகளிலே வந்து சேர்ந்துவிடும் என்றும், அவைகளைப் பிடித்து அவற்றின் நகங்களையும், பற்களையும் அறுத்தெறிய வேண்டும் என்றும், அப்பொழுதுதான் மக்கள் நன்மையடைய முடியும் என்றும் திருமூலர் கூறுகின்றார். அந்த ஐந்து சிங்கங்கள் எவை? ஐம்பொறிகள். அவையாவன, ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பவற்றை அறியக்கூடிய சக்திகள். அவைகள் வாழும் காடு எது? தூல தேகம். ஐந்து குகைகள் எவை? காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்னும் உறுப்புக்கள். அவைகளுக்கு உணவு, முன் சொன்ன ஓசை முதலிய புலன்கள். அப்புலன்களை யுடைய பொருளே அவை சென்று மேயும் இடங்கள். அச் சிங்கங்களுக்கு உள்ள நகமும், பற்களும் எவை? ஐம்புல ஆசை. ஐம்பொறிகளை, யோகத்தினாலும், ஞானத்தினாலும் கட்டுப்படுத்தி, அவற்றின்வழிச் செல்லும் ஆசையை அறுத்தால் இறைவனை அடைந்து இன்பம் பெறலாம். "உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் — வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து" என்றும், "தொண்டர் அஞ்சு களிறும் அடக்கி" என்றும் பல இடங்களிலும் யானையாகக் கூறப்படும் ஐம்பொறிகளைத் திருமூலர் சிங்கமாக வைத்து வெளியிடும் திருமந்திரம் இது :-

> அஞ்சுள சிங்கம்; அடவியில் வாழ்வன;
> அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்;
> அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்,
> எஞ்சாது இறைவனை எய்தலும் ஆமே.

(உகிர் - நகம். எயிறு - பல்.)

இத் திருமந்திரத்தின்வழி ஐம்பொறிகளை அடக்கி, ஐம்புல ஆசையை அறுத்து, இறைவன் திருவருளைப் பெறுவோமாக.

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

உரை :- தருமையாதீனப்புலவர், பண்டித, வித்துவான்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 26, இதழ் 7, பக்கம் 375 இன் தொடர்ச்சி)

ஈன்ற வன்னைக்குத் தனயன் றுயர்தெரி யாததென்னே
யான்ற வறிவும் பொறுமையுந் தூய்மையு மன்புமுளாய் !
நான்றவ றென்னை யுனக்குச்செய் தேனுரை நன்மையின
மேன்றவ வாற்றிலை யன்னாய் தயிலம்மை யீச்வரியே. 77

(இ - ள்) அன்னாய் - தாயே ! ஈச்வரி ஏ - பெருமாட்டியே. தயிலம்மை - தயிலம்மை யென்னும் நாமமுடையவளே ! ஈன்ற அன்னைக்கு தனயன் துயர் தெரியாதது எ(வ)ன் ஏ - பெற்ற தாய்க்கு பிள்ளை யடையும் துன்பம் தெரியப் பெறுதது யாது காரணமோ ? ஆன்ற அறிவும் பொறுமையும் தூய்மையும் உள்ளாய் - நிறைந்த ஞானமும் நிறைந்த பொறையுடைமையும் நிறைந்த தூய்மையாந் தன்மையும் உடையவளே. நான் - அடியனேன். தவறு என்னை உனக்குச் செய்தேன் - தேவரீருக்கு யாது குற்றம் புரிந்தேன். (இன்னம் நன்மை.) ஏன் தவ ஆற்றிலை - இன்னமும் நன்மையான. ஞான வொளியினை ஏன் மிகவும் செய்தருளவில்லை. உரை - திருவாய் மலர்ந்தருளுவீராக. (எ - று).

(கு - ரை) தவ - மிகுதியுணர்த்தும் உரிச்சொல். ஆன்ற - நிறைந்த, எவன் என்பது என் எனவாயிற்று. இன்னம் இடைக்குறையாய் இனம் என வந்தது. தூய்மை - நிர்மல முடைமை. ஆற்றல் - புரிதல். ஆற்றில - எதிர்மறைமுற்று.

ஈசனு மாலும் பிரமனுந் தேவரும் யாவருநின்
னேச விழியருட் காசையுற் றேயெதிர் நிற்பரெனில்
ஏசமர் நீச முழுமக னேற்கரு ளெய்திடுமோ !
வாச மலர்ப்பொழில் வேளூர்த் தயிலம்மை வந்திக்தனே. 78

(இ - ள்) வாசம் மலர் பொழில் வேளூர் தயிலம்மை - நறுமணம் கமழும் மலர்கள் செறிந்த சோலைகள் புடைசூழ்ந்த வைத்

தீச்சுவரன்கோயில் என்னுந் திருப்பதியில் கோயில் கொண்டருளிய தயிலம்மை யென்னுந் திருநாமமுடைய தாயே! நின் நேசம் விழி அருட்கு - தேவரீருடைய அன்பாகிய திருக்கண் கருணைக்கு. ஈசனும் மாலும் பிரமனும் தேவரும் யாவரும் - உருத்திரனும் திருமாலும் பிரமதேவனும் தேவர்களும் மற்றை முனிவரரும். ஆசையுற்று எதிர்நிற்பர் என்னில் - அவாயுற்றே சந்நிதியில் வரங்கிடந்து நிற்பார்கள் என்றால். ஏசு அமர் நீசமுழுமகனேற்கு - குற்றம் நிறைந்த இழிந்த அறிவிலியாகிய மூடத் தன்மை யுற்ற ஏழைக்கு. அருள் எய்திடும் ஓ - கருணையடைந் திடுமா? ஆயினும். வந்தித்தன் ஏ - வணங்குதலைப் புரிந்துள்ளேன். அருள் புரிவாயாக. (எ - று).

(கு - ரை) நேசம் - அன்பு. முழுமகன் - மூடன். வந்தித்தல் - வழிபடல். எதிர்நிற்றல் - வரங்கிடத்தல். நீசம் - இழிவு. (தாழ்வு.)

வந்தி யிடுமிடி யுண்டந்தக் கூடலின் வந்தணைமண்
சிந்தி யிடுபரன் சிந்தை மகிழ்தரச் செய்பவளே!
சந்திப்ப தென்றுன் றிருவடி யென்னகஞ் சந்ததமுஞ்
சிந்தித் துளனிரங் காய்தயி லம்மைச் சிவனுயிரே 79

(இ - ள்) வந்தி இடும் இடி உண்டு அந்த கூடலின் வந்து - (மணிவாசகப்பெருமான் பொருட்டு வைகைப்பெருக்கின்போது) வந்தியெனும் பிட்டு வாணிச்சியால் கூலியாக இடப்பட்டுள்ள பிட்டினையருந்தி, அந்த நான்மாடக்கூடலில் கூலியாளாய் வந்து, அணை சிந்தி குருபரன் சிந்தை மகிழ்தர செய்பவள் ஏ - வைகையாற்றின் கரையின்கண் மண்ணினை யெடுத்து வாரிச் சிதறியருளிய சொக்கலிங்கப்பெருமான் திருவுளங் களிப்புறச் செய்தருளும் மீனும்பிகையே! சிவன் உயிர் தயிலம்மை ஏ - சிவபெருமான் உயிரோவியம் போன்றவளே! தயிலம்மை தாயே! உன் திருவடி என் அகம் சந்திப்பது என்று - தேவரீருடைய திருவடிகள் ஏழை யடியேன் மனத்தின்கண் வந்து தங்கியருளுவது எக்காலம். சந்ததமும் - எப்பொழுதும். சிந்தித்துளன் - தியானித்துக் கொண்டுளேன். இரங்காய் - திருவுளம் இரங்கியருள்வீராக. (எ - று).

(கு - ரை) இடி - பிட்டு. அணை - கரை. சிந்தியிடல் - வாரியிறைத்தல். சந்திப்பது - கூடுவது. சந்ததம் - எப்போழ்தும். சிந்தித்தல் - எண்ணல். பரன் - மேலானவன். (மகா தேவன்).

**சிவமடைந் தாலென்ன புழுதியுற் றாலென்ன சேண்டரையி
னவமா யிருந்து சுகமடைந் தாலென்ன நானடைந்தேன்
தவரோடு வானவர் அந்தணர் நாளும் தணப்பரிதாந்
தவவருள் செய்திடும் வேளூர்த் தயிலம்மை தாணிழலே.** 80

(இ - ள்) (உலகில்.) சிவம் அடைந்தால் என்பு புழுதி உற்றால் என்ன - மங்கலம் பெற்றால் ஆவது என்னே, உடலெல்லாம் மாசு படிந்தால் ஆவது யாது? சேண் தரையில் நவம் ஆ(க) இருந்து சுகம் அடைந்தால் என்ன - அழகிய பூமியில் புதுமையாக உறைந்து உடனலத்தைப் பெற்றதால் ஆவது யாது? (அவற்றால் வருவது ஒருபயனுமின்று) தவர் ஒடு வானவர் அந்தணர் நாளும் தணப்பு அரிது ஆம் - முற்றத் துறந்த முனிவரர்களுடன் தேவரும் மறையவரும் நாடோறும் வந்து சந்நிதியினின்று வரங் கிடப்ப நீக்கற்கரிய மிக்க கருணை புரிந்திடும் வேளூர் - வைத்தீச்சுவரன் கோயிலில் எழுந்தருளி யிருக்கும், தயிலம்மை தாள் நிழல் ஏ. நான் அடைந்தேன் - தையல்நாயகித்தாயின் திருவடி நிழலை அடியனேன் பெற்றனன். (எ - று).

(கு - ரை) தவ, உரிச்சொல், மிகுதிப் பொருள் தருவது. அந்தணர் - அழகிய தட்பமுடையவர். வேதாந்தத்தை யணவினர் என்றுமாம். தவர் - விரத ஒழுக்கமுடையவர். வானவர் - விண்ணுலகினர். நவம் - புதுமை. புழுதி - மண் துகள். சேண் - அழகு. தணப்பு - நீக்கம்.

தாவாத செல்வந் தருவா யெனிலித் தரணியிலே
நாவார நீரனம் வந்தவர்க் கீந்திடு நல்வரந்தா
கோவா யிருந்துமு லோப மிருக்கிற் குணமிலையாங்
காவா வடிமையை வேளூர்த் தயிலம்மைக் கற்பகமே. 81

(இ - ள்) வேளூர் தயிலம்மை கற்பகம் ஏ! தாவாத செல்வம் இ. தரணியில் தருவாய் எ(ன்)னில் - தேவரீர் அழியாத (கெடாத) செல்வர் பொருளினை இம் மண்ணுலகில் நன்கு வாழ அருளுவையாயின், நா ஆர நீர் அ(ன்)னம் வந்தவர்க்கு ஈந்திடும் நல் வரம் தா - நாச்சுவை நிறைய தண்ணீரும் சோறும் (கறியும்) தன்னிடத்து வந்த விருந்தினருக்கு அளித்திடும் நல் வரத்தினைக் கொடுத்தருளுவாய். கோ ஆக இருந்தும் உலோபம் இருக்கின் குணம் இல்லை ஆம் - உலகினை யாளும்

அரசனுக விருந்தாலும் அவர்மாட்டு உலோபத்தன்மை இருக்குமாயின் அது நன்மைத் தன்மை யில்லையாம். தாயே! நீ, அடிமையை கா வா - அடியேனைக் காப்பாற்ற எழுந்தருள்க (எ - று).

(கு - ரை) தாவாத - அழிதலை யடையாத. கற்பகம் - கேட்டவற்றை யருள்வது (தேவ விருட்சம்). உலோபம் - ஈயாத் தன்மை. கோ - மன்னன். விந்தவர் - தன்னிடம் வந்த இரவலாளர். (விருந்தினருமாம்). ஆர - அருந்த. (நிறைய).

கற்பகந் தேனுசிந் தாமணி யென்று கருமையுறுங்
கற்பக வான மனமுடை யோரைக் கரைபுலவீர்!
கற்பகங் காரங் கொடுகாலம் வீணிற் கழிக்கின்ற நீர்
கற்பகத் தாயெனப் பாடுந் தயிலம்மை காத்திடுமே. 82

(இ - ள்) கருமை உறும் கல் பக ஆன மனம் உடையோரை - வன்மையடைந்த கருங் கல்லும் பிளக்குமாறு ஆன (வலிய) மனமுடைய கயவரை நோக்கி, கற்பகம் தேனு சிந்தாமணி என்று கரை புலவீர் - கற்பகத்தருவே காமதேனுவே சிந்தாமணியே (இவைகள் கேட்டவற்றினை யங்ஙனமே கொடுப்பவை) என்று கூறி கவிபாடும் புலமை யுடையோரே! கற்பு அகங்காரம் கொ(ண்)டு காலம் வீணில் கழிக்கின்ற நீர் - கல்வி முனைப்புக் கொண்டு வீணுகக் காலத்தினைக் கழிக்கின்ற நீவிர், 'கற்பகத்தாய்' என பாடும் - கற்பகம் போலும் கருணையோடு வேண்டுவார்க்கு வேண்டுவதை யருளும் தாயே எனப் பாடுதலைச் செய்யுமின். தயிலம்மை காத்திடும் - தயிலம்மையார் காத்தருள் புரிவார். (எ - று).

(கு - ரை) கருமை - வன்மை. பகவு - பிளவு. கற்பு - கல்வி. அகங்காரம் - நான் என்னும் அகந்தை. கரைதல் - கூறுதல். கற்பு அகத்தாய் - கற்புத் தன்மை வடிவானவளே ஏகாரம் - தேற்றம்.

(தொடரும்)

கவிதை இன்பம்

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling*

கவிதைச் சிறப்பு :

இனிய பாட்டு ஒன்றைக் கேட்டால் நம் இதயம் மகிழ்கின்றது; நெஞ்சில் ஓர் இன்பம் சுரக்கின்றது; உணர்வு அப் பாட்டின் ஒலிநயத்தில் ஈடுபட்டு ஒன்றுகின்றது. ஆம்; பாட்டின் மாயம் - புதுமை - பேறு இது என்று கூறலாம். நெஞ்சை நெகிழ்வித்தலில் பாட்டுச்சிறப்பிடம் பெறுகின்றது. உரை நடைக்கு இத்திறம் இல்லை. உணர்வைத் தட்டியெழுப்பித் தன்வயப்படுத்தி இன்புறுத்தலில் உரைநடையினும் சிறந்து விளங்குகின்றது பாட்டு. இப்பாட்டைக் 'கவிதை' என்றும் கூறுகின்றோம். கவிஞன் தன் உணர்வுகளைக் கவிதைகளில் வடிக்கின்றான். அவனது வியத்தகு அநுபவங்கள் கவிதையில் வடிவம் பெறுகின்றன. உரைநடையைவிடக் கவிதையைத்தன் கருத்து வெளியீட்டிற்கு ஏற்ற கருவியாகக் கவிஞன் மேற்கொள்ள இதுவே காரணம் எனலாம்.*

கவிதையநுபவத்தைப் பெற முதற்கண் எது தேவை? நெஞ்சப்பாங்கு தேவை. ஒலிநயத்தில் ஈடுபடும் பண்பு தேவை. இதனாலன்றோ 'செவிநுகர் கனிகள்' என்று கவியரசர் கம்பர் கவிதைகளைக் குறித்தார். செவியால் நுகரத்தக்க கனிகள் கவிதைகள் என்று கூறும் உண்மை உற்றுநோக்கத் தக்கது.

---

* " Poetry therefore having something to express which prose cannot, Just us religion, science and metaphysics, each supplies something the rest cannot. has its Peculiar method of treating thought, imagination, and feeling " P. 69 " An Approch to Poetry " -Phosphor maliam London 1929.

திறன் ஆய்வு:

தமிழ்க் கவிதைகளைப் பொறுத்தவரை இந்த ஒலிநயமும், உணர்வுவெளியீடும் மிக்க சிறப்பிடம் பெற்றுள்ளன. கவிஞன் தன் உணர்ச்சியைத் தன்னை மறந்த லயம் தன்னில் இருந்து வெளியிடுகின்றான் என்றோம். அந்த அநுபவத்தை நாமும் பெற அளிப்பதே உயர் கவிதை; உண்மைக்கவிதை. அவ்வநுபவத்தை வார்த்தைகளாற் காட்டி, நெறிமுறை காண்பதே உயர் திறன் ஆய்வு; உண்மைத் திறன் ஆய்வு.

எனவே 'கவிஞர்கள் பிறக்கிறார்கள்; ஆக்கப்படுவதில்லை' என்பது எந்த அளவுக்கு உண்மையோ' அந்த அளவுக்கு உண்மையே 'கவிதையைச் சுவைக்கிறவர்களும் பிறக்கிறார்கள் ஆக்கப் படுவதில்லை' என்பதும்.[1] எல்லோர்க்கும் கவிதையை அறிந்து, உணர்ந்து சுவைக்கும் திறம் வந்துவிடாது. இன்று தான் பார்ப்போமே. தமிழ் நாட்டில் சங்க நூல்கள் முதல் இந்நாள் வரை எவ்வளவு ஆயிரம் பாடல்கள் தோன்றியிருக்கின்றன? எத்தனைபேர் கவிதைகளைப் படிக்கும் இயல்பு பெற்றுள்ளார்கள்? இன்று தோன்றும் புதுமைக் கவிதைகளை (திரைப்படப் பாட்டுக்கள் நீங்கலாக; ஏனெனில் பெரும்பாலான படப்பாட்டுக்கள் இன்று இசை வடிவம் பெற்றுலவும் உரைக் கோப்புக்களே ஆம்) எத்தனைபேர் படிக்கிறார்கள்? குறைவென்றே கூறவேண்டும். கவிஞன் பெற்ற இன்ப அநுபவ வேட்கை உடையவர்கள் மட்டுமே கவிதையை அணுக முடியும் - அத்தகையோரே உண்மையாகக் கவிதையை நெருங்கிப் பாராட்டமுடியும்; அப்பாராட்டு அறிவின் அடிப்படைதான். ஆனால் உணர்வின் அடிப்படையின் மீது தோன்றும் அறிவார்ந்த பாராட்டாக அஃது அமையும். அவ்வாறு, உணர்வு அல்லது மெய்ப்பாடு கலவாத, வெறும் அறிவுப் பாராட்டு படை இல்லாத படைத்தலைவர்க்கு நிகர் என்பர் அறிஞர்.[2] இதை விளக்க ஓர் எடுத்துக் காட்டுக் கூறலாம்.

---

[1] "It must not, however, be forgotten that the lover of poetry, like the poet, is born not made, and that no amount of culture can develop a seed that has never been sown" — Ibid. P. 6-7.

[2] "Intellectual appreciation is a great thing, but unless it is founded or emotional appreciation it is a commander without an army." — Ibid. P. 6-7.

பாராட்டு வகை

இனிய பூஞ்சோலை; நன்மணத்துடன் கூடிய புதுமலர்கள் பூத்துக் குலுங்கும் இளங்காலைப் பொழுது. அறிஞன் ஒருவன் அவ்வழியே வந்து மலர்களைக் காண்கின்றான் எனக் கொள்வோம். அவனுக்கு அம்மலர்களைக் கண்டதும் 'உணர்வுப் பரவசம்' ஏதும் தோன்றாது; இயல்பாக அவற்றை நோக்கு கின்றான். அவை பற்றிய படைப்பின் அற்புதமோ, உலகப் பேரழகின் விளக்கமோ, பூமகளின் புன்னகைக் கீற்றோ, அவ் வறிஞன் மனத்தே எழவில்லை. மாறாக, அச்சோலையிற் பூக்கும் பூக்கள் ஆண்டொன்றுக்கு எவ்வளவு வருவாய் விளைவிக்கு மென்றோ; அது நாட்டின் பொருளாதாரத்திற்கு எவ்வகையில் உதவக் கூடுமென்றோ, வெளிநாட்டிற்கு அவற்றை வேறு எவ்வகையில் பதப்படுத்தி அனுப்பிப் பொருளாதாரச் செலா வணியைப் பெருக்கலாமென்றோ அவனது சிந்தனையில் எண்ண அலைகள் புறப்படக்கூடும். அன்றி, அம்மலர்களின் அமைப்பழகு, அவற்றை மேலும் உண்டாக்கும் நிலைமைக்கூறு முதலியன பற்றியும் அவனது அறிவு எடையிடக்கூடும். அவ்வாறு எண்ணுவது பிழையோ என்றால் இல்லை. அச்சோலையில் கலைஞன் அல்லது கவிஞன் ஒருவன் அவ் விளங்காலைப்போதில் வருகின்றான் எனக் கொள்வோம். அவனது உணர்வு துள்ளி எழும்: இயற்கையில் தோன்றும் அழகின் சிரிப்பை அப்புது மலர்களில் அவன் காண்பான். "இறைவா! எத்தனை கோடி இன்பம் வைத்தாய், இப்புவிமேலே, என்று [1] மலர்களின் மணத்தில் - பரந்துள்ள பேரழகில் - ஈடுபட்டு இறையருளை வியந்து நிற்பான், அப்பூக்கள் காற்றில் அசைந்தாடும் போது 'பூமகளே புன்னகை செய்து ஆடுவ' தாகத் தோன்றும் அவனுக்கு. 'பூமகளின் புன்னகைபோல் பூத்திடுவோமே' என்று [2] சமுதாயத்திற்கே அறைகூவல் விடுத்து ஆனந்தக்கூத் தாடும் அக் கலைமனம். அவன் எண்ணத்திலும் பிழை இல்லை.

இது இருவேறு பார்வைகளைக் காட்டுகின்றது. இவ்வாறே ஓர் உண்மைக் கவிதை, கற்பனை, ஒலிநயம், உணர்ச்சி வெளியீடு விழுமிய பொருள் அடிப்படை கொண்ட ஓர் அற்புதப்பாட்டு

---

[1] பாரதியார் கவிதைகள் - 'எத்தனைகோடி இன்பம்-'

[2] கவிமணி கவிதைகள் "மலரும் மாலையும்"

அறிவு ஒன்றே பொருளாகக் கொண்டவனுக்கு எழுப்பும் உணர்வுகள் வேறு; இனிய கவிமனம் கொண்டவனுக்கு விளைக்கும் மெய்ப்பாடுகள் வேறு.

வடிவத்திற்கு முதலிடமா ?

கவிஞன் தன் உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்தும் போது வடிவத்திற்கு முதலிடம் கொடுப்பானா? என்பது ஒரு சிக்கலான கேள்வி. அவன் தன் ஆன்ம உணர்வுக்கே முதலிடம் கொடுப்பானே தவிர, அது எவ்வடிவில் தோன்றவேண்டும் எனக் கருதுவதில்லை. அவ்வாறு கொடுப்பானாயின் அவன் 'படைப்போன்' அல்லன். 'இயந்திரப் போக்குடையவனே' ஆவன்.* அவ்வுணர்வு தானே உருப்பெறும்; ஏற்ற வடிவம் கொள்ளும். அதுவே உண்மையான கவிதையின் இலக்கணமாக இருக்கும். இவ்வாறு இயல்பாக எழுந்த இலக்கிய வகைகளே அடுத்து இலக்கணமாக ஏற்கப்பெற்று விதிகளின் வழியே சட்டமாக்கப்பட்டன.

'சோ' வெனக் கொட்டுகிறது பெருமழை. வானத்தி லிருந்து ஒளி சிதறும் நீர்த்தாரைகள் பெருகிப் பூமகளை அணைக் கின்றன. பெருகி ஓடி அன்னையின் மார்பகத்தே விளையாடும் தண்ணீர் பள்ளம்கண்ட விடங்களில் தேங்கி நீர்நிலையாகிறது. பிறபகுதி அருவியாய்-சிற்றாறாய்-பேராறாய்ப் பெருக்கெடுத்துக் கடலை நோக்குகின்றது. இதனை மேற்கூறிய கருத்துடன் ஒத்து நோக்கினால், தன்னுணர்ச்சி புலப்படுத்தும் கவிதைகள் இயல் பான வடிவங்களைப் பின்னே கண்டு இலக்கணங்கள் புனையப் பெற்றன என்ற உண்மை புலனாகும். ஆதலால் உணர்வு வழி பட்டு நிற்கும் உண்மைக் கவிஞர்கள் தம் ஆன்ம உணர்வு பெறும் வடிவங்களைக் குறித்துப் பெரிதும் கவலை கொள்வ தில்லை என்று தெளிவாகும்.

வெவ்வேறு வடிவங்கள் :

சங்ககாலக் கவிஞர்களது உணர்ச்சிப்பேறுகள் எளிய, ஓட்டமான ஆசிரியப் பாக்களாக வடிவம் கொண்டன.

* "A Poct does not go to form for inspiration but to inspiration for form. Otherwise, he would not be a creator but a mechanic" Ibid. 35.

அடுத்து வெண்பா வடிவம் கொண்ட அநுபவங்கள் பல. அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், மணிவாசகரும் முதலிய அருளாசிரியர்களது பக்தி அநுபவம் விருத்தப் பாக்களின் வெவ்வேறு வடிவங்களாக வெளிவந்துள்ளது. கம்பரும், திருத்தக்க தேவரும், சேக்கிழாரும் தம் காப்பியப் போக்கிற்கு விருத்தங்களின் அற்புதக் கலவையைக் கையாண்டு கோயில் எடுத்தனர். இவ்வாறு இவர்கள் அநுபவம் பல்வேறு வடிவங்களை - பல்வேறு கோலங்களைக்கொண்டு 'இதுதான் உயர்ந்த கவிதை' என்று சுட்டி நிற்கின்றது.

பக்தி அநுபவம் :

இவற்றுள் பக்தி அநுபவத்தில் ஒரு காட்சி. இங்கே கவிதை கருவியாக உயர்ந்த பக்தி காதலாக மாறி மலர்கின்றது. ஒரு தலைவி; அவள் தலைவன்மேல் வைத்திருக்கும் காதல் உயிர்க்காதல். தன் உடலும், உள்ளமும், உடைமை எல்லாமும் தலைவனுக்கே என்று ஆக்கியவள் அவள். அவனோ பிரிந்து சென்றுவிட்டான்; அந்த நிலையில், அவள் தன் ஆற்றாமையைக் குரலெடுத்துப் பாடுகிறாள். அற்புதமான கவிதை ஒன்று வடிவெடுக்கிறது. அவளது பிரிவாற்றாமை - ஆன்மநேயம் - சொல்லுக்குச் சொல் சுவை ஏற்றுகிறது.

"வீசுகின்ற தென்றற்காற்றே! நீ புதியையாய்த் தோன்றுகின்றாய்; இனிமையைச் சுமந்து வருகின்றாய்; மலரெலாம் அணைந்து வருகின்றாய்! பழனம் என்ற ஊரில் உள்ளான் என் தலைவன். அவனைப் பலரும் பாடுகின்றார்கள்; புகழ் போற்றுகின்றார்கள். அவன் புறங்காட்டையும் பதியாக உடையவன் தான். மதியாதாரையும் மதிக்கும் பெருந்தன்மை அவனுடையது. அவன் அடைந்தாரைக் காக்கும் அண்ணல். அந்தக் கருணையின் அடையாளமே அவன் முடியிற் சுமந்துள்ள மதி. தஞ்சமென்று வருவோரைத் தாங்கி நிற்பதில் அவன் ஒப்புமை இல்லாத ஒருவன்; அதன் அடையாளமே அவனது திருமுடியில் தோன்றும் கங்கைப் பேராறு. அத்தகைய விதியாளன் - அவ்வித்தகன் - உன்னை என்மேல் விளையாடச்சொல்லி உன்னை அனுப்பிவைத்தானோ?"

என்று கரைகின்றாள் அவள். தென்றலைப் பழிக்கும் பாங்கு இங்கே உள்ளது.

' என் உயிர்மேல் விளையாடல்
விடுத்தானே '

என்ற முற்றுப்புடன் முடிகிறது இவ்வருங்கவிதை.

உடல்மேல் மோதுவதே காற்றின் தொழில். ஆனால் இங்கோ உயிர்மேல் தாக்குவதாகக் கூறுகிறாள் தலைவி. இங்கு உண்மை ஒன்று புலனாகின்றது. தென்றல், கூடியிருந்த காலத்து உடல்தழுவி, உயிர் தழுவி, உயிர் தழுவும் காதலைத் தழுவிக் களிப்பித்த இயல்புடையது. பிரிந்த காலத்து அக் காற்று இயல்பாக வருங்காலத்து தலைவிக்கு அக்கூடல் நினைவு வருவதும் இயல்பே. அக்காதல் உயிர்ப்பண்பு அல்லவா? அதனைத் தூண்டி விளையாடும் தென்றலை ' உயிர்மேல் விளையாடல் ' என்று உரைப்பது மிகப் பொருத்தமே

பாட்டில் தலைவியின் குரல் தெளிவாகக் கேட்கிறது. ஒலி நயம் துயரத்துக்கேற்றபடி துணை நிற்கின்றது. தலைவன் புகழ் பேசும் வரிகளோ பக்தி பரவசம் ஊட்டுகின்றன. மதியாதாரை மதிப்பவன் என்பதும், அடைந்தவர்க்கு அடைக்கலம் தருபவன் என்பதும், பெரிதும் மதிக்கும் என்னைக் கைவிட மாட்டான் என்றும், தன்னையன்றி வேறு புகலில்லாத எனக்குப் புகலாவான் அவனே என்றும் குறிப்புப் பொருளைத் தருகின்றன. இவ்வாறே பலப்பல குறிப்புப்பொருள்களைத்தரும் இவ்வுயர் கவிதையின் முழுவடிவம் இது.‡

" புதியையாய் இனியையாம் பூந்தென்றல் புறங்காடு
பதியாவ திதுவென்று பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதிநங்கை
விதியாளன் என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானே "

பழந்தக்கராகப் பண்ணில், இதைப் பெருந்தமிழ்ப் புலவர்ஏறாக விளங்கிய அப்பரடிகள் திருப்பழனத்திற் பாடியபோது, தாம் ஒரு தலைவியாகவே இருந்து பாடியுள்ளார். ' இறைவனைப் பிரிந்து இடர்க்கடல் மூழ்கும் உயிரின் ' ஒலக்குரலாக இது உள்ளது. உயர்ந்த கவிதைக்குள்ள இயல்புகள் அனைத்தும் இதன்கண் இயல்பாக அமைந்துள்ளமை காணலாம்.

---

‡ அப்பர் தேவாரம் - திருப்பழனம் 4-12-4 (சமாசப் பதிப்பு - 1941.)

விழுமிய இன்பம் :

உரைநடையால் விளக்கவியலாத அரும் பொருளை, பக்தி அநுபவத்தை, அழகிய வடிவிலே, சிறந்த ஒலி நயத்துடன், தேர்ந்த சொல்லாட்சிச் சிறப்பிலே காட்டி நிற்கும் இத்தகு கவிதைகள் அப்பரடிகள் திருவாக்கில் பல உள்ளன. சார்பு நில்லாது நோக்குவார் நெஞ்சத்து, 'விழுமிய இன்பம்' விளைப்பன அவை.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

My wife and I along with our children are indeed blessed today in having this magnificent opportunity of having the Dharshan of the Lord Vaideeswarar and Amman. We are immensely satisfied with the visit to this great shrine and we look forward to visiting this place and worshipping the Lord again. We are greatful to the temple authorities for the courtesy extended.

(Sd) M. Venkataraman, I. A. S.
Collector & District Magistrate,
Guntur

20–6–67.

I have visited quite a few temples in South India. This is one of the best managed temples, where the ancient form of worship are scrupulously adhered to. Dating back to very ancient times, a rich lore of traditions has gathered about the temple Worship here has offered consolation and cheer to millions of devotees thro' the ages

(Sd.) R Krishnamurthi
Principal (Retd.)
Pachaiyappas College Madras.

21–6–67.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

உதகமண்டலம் - கோயம்புத்தூர்

9—6—'67 முதல் 13—6—'67

இந்து சமயப் பிரிவினரிடையே உள்ள கருத்து வேறுபாடு களை விலக்கி எல்லோருக்கும் இசைந்த அனைவருக்கும் பொது வானவற்றையே பட்டும் வலியுறுத்தவும், இந்து சமய அடிப் படைக் கொள்கைகளில் நம்பிக்கையுடைய இந்துக்கள் அனைவருக் கும் பயன் அளிக்கும் வகையில் அந்தந்த சமயங்களில் உள்ள கொள்கைகளைக் கொண்டு சமயத்துறையில் வாழ்க்கை நடத்தத் துணை செய்யவும், உரிய முறையில் சமயப்பணிகள் புரியத் தூண்டுதல் செய்யவும் "தமிழ்நாடு தெய்விகப்பேரவை" சென்னையில் சென்ற வருடம் தமிழ் நாட்டிலுள்ள திருமடங்கள், திருக்கோயில்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டு தொடங்கப்பெற்றது.

இதில் இத்தெய்விகப் பேரவையின் ஆதரவில் வாரவழிபாடு, பண்டைய கலா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்தல், புராண இதிகாசச் சொற்பொழிவுகளுக்கான ஏற்பாடுகள் செய்தல், மருத்துவச் சாலைகளில் உள்ள நோயாளிகளுக்குத் திருக்கோயில் களிலிருந்து விபூதி, குங்குமப் பிரசாதம் வழங்குதல், சிறைச்சாலை களிலுள்ள கைதிகளுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கி இந்துமதப் பிரசாரகர்களைக் கொண்டு சொற்பொழிவிற்கான ஏற்பாடுகள் செய்தல், பிடி அரிசித்திட்டம், சிறு பிரசுரங்கள் அச்சிட்டு வழங்குதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டு நம் நாட்டிலுள்ள கிராம, தாலுக்கா, ஜில்லா சங்கங்கள் அமைத்து அன்பர்களை இத்தெய்விகப் பணியில் ஈடுபடும்படியாக ஊக்குவிக்க ஏற்பாடு கள் நடந்து வருகின்றன.

இரண்டாவது வருடம் தெய்விகப் பேரவையில் மாநிலக் குழுவின் கூட்டம் நீலகிரி ஜில்லா உதகமண்டலத்தில் 11, 12—6—'67 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றன.

11-ம் தேதி காலை "தமிழகக் கட்டிடத்தில்" பேரவையின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் தலைமையில் தெய்விகப் பேரவை தொடங்கியது. இப்பேரவையின் மாநிலக்குழுவின் அங்கத்தினர்களாகிய அடியிற்கண்ட திருமடங்களின் தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம், மதுரை ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம், குன்றக்குடி ஸ்ரீ திருவண்ணாமலை ஆதீனம், காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் மடம், திருவண்ணாமலை ஸ்ரீ ஈசான்ய மடம், பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமி மடம், கோயம்புத்தூர் ஸ்ரீ கௌமாரமடம்.

முதலில் அடுத்த வருடத்திற்கான தலைவரைத்தேர்ந்தெடுத்ததில் தருமபுரம்ஸ்ரீல ஸ்ரீகயிலைக்குருமணிஅவர்களையே தொடர்ந்து இன்னும் ஓர் ஆண்டுக் காலத்திற்குத் தலைமை தாங்கும்படிக் கேட்டுக்கொண்டு அதன்படி தலைவராக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நம் சமயக் கொள்கைகளைக் கொண்ட அநாதைவிடுதி, ஆஸ்பத்திரி, கான்வெண்ட் ஸ்கூல், ஆகமங்களுக்கான பயிற்சிப் பள்ளிகள் முதலியவைகளை மிக நல்ல முறையில் மாயூரத்திற்குப் பக்கத்திலுள்ள பன்னம்பந்தலில் "தமிழ்நாடு தெய்விகப்பேரவை எஸ்டேட்" என்ற ஓர் நிறுவனம் ஸ்தாபித்து ஆரம்பிக்கலாம் என்றும் அதற்குப் பூர்வாங்க ஏற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டுமென்றும் ஆலோசிக்கப்பட்டது.

அடுத்து வரும் ஜூலைமாதக் கடைசி வாரத்தில் இப்பேரவையின் மாநிலக்குழுக்கூட்டத்தைத் தருமபுரத்தில் கூட்டவும் முடிவு செய்யப்பட்டது. இப்பேரவையின் துணைத் தலைவர் திரு மா. சே. சாரங்கபாணிமுதலியார் பி.ஏ., பி. எல்., (ஆணையாளர் இந்து அறநிலைய ஆட்சித்துறை, சென்னை,) செயலாளர் (பொறுப்பு) திரு. ஏ. சிதம்பரம், பி ஏ., பி. எல்., (துணை ஆணையாளர், இந்து அறநிலைய ஆட்சித்துறை, சென்னை,) செயலாளர் (பதவி ஏற்க இருப்பவர்) திரு ஏ. மார்க்கண்டவேல்ராஜன், (துணை ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சை) திரு. கே. ராஜா, பி. ஏ., பி எல்., (துணை ஆணையாளர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, மதுரை) முதலியோர்கள் கலந்து கொண்டார்கள். துணைத் தலைவர் திரு. மா, சே சாரங்கபாணி முதலியார் அவர்கள் மாநிலக்குழுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். கூட்டம் சங்கீதபூஷணம், திரு. பி. சாமிநாதன் அவர்களின் கடவுள் வணக்கத்துடன் தொடங்கியது. மாநிலக்குழுக் கூட்டம் தொடர்ந்து 12—6—'67 மாலையிலும் நடைபெற்றது.

திருமடங்களின் மகாசந்நிதானங்களுக்கு உதகை நகர மக்களின் சார்பில் மிகப்பெரிய அளவில் 10-6-67 ல் "குதிரைப் பந்தயத் திடலில்" வரவேற்பு அளிக்கப்பட்டது. காலை 10 மணி

அளவில் பேரவைத்தலைவரும், தருமபுர ஆதீன கர்த்தரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தங்கிய "சுந்தர விலாசத்தில்" மகா சந்நிதானங்கள் வந்து சேர்ந்தார்கள். வரவேற்புக்குழு அங்கத்தினர்கள் அங்கு வந்து நாதஸ்வரம், தாரை, தப்பட்டை, ஆதிவாசிகளின் வாத்தியங்கள், பஜனைக் கோஷ்டிகள் முதலியவைகளுடன் மகாசந்நிதானங்களை ஊர்வலமாக வரவேற்பு இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்குப் பூர்ணகும்ப மரியாதை செய்து மலர் மாலைகள் அணிவித்தார்கள். நீலகிரி மாவட்டங்களில் உள்ள பல சங்கங்களின் சார்பில் அதன் அதன் தலைவர்கள் வரவேற்பு இதழ்களும், மலர் மாலைகளும் வழங்கினார்கள். பேரவையின் தலைவரும் தருமபுர ஆதீன கர்த்தரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்கள் அருளுரை நிகழ்த்தினார்கள். இப்பேரவையின் துணைத்தலைவர் திரு. சாரங்கபாணி முதலியார் அவர்கள் பேரவையின் நோக்கங்களை விரிவாக எடுத்துரைத்து விளக்கினார்கள்.

மகாசந்நிதானங்கள் உதகையில் 9—6—'67 முதல் நான்கு தினங்கள் தங்கி பக்கத்திலுள்ள பல கிராமங்களுக்குச் சென்று பிடிஅரிசித்திட்டம், வாரவழிபாட்டுச்சங்கங்கள் அமைத்தல், விபூதி குங்குமப் பிரசாதங்கள் அன்பர்களுக்கு வழங்குதல் முதலிய காரியங்களில் காலைமுதல் இரவுவரையில் ஈடுபட்டு வந்தார்கள். இக்கூட்டங்களில் மக்கள் காட்டிய அன்பும், ஆதரவும் வர்ணிக்க இயலாது. இந்த நான்கு தினங்களும் உதகையில் நேரில் இக்காட்சிகளைக் கண்ட அன்பர்கள் பெரும் பாக்கியசாலிகளே.

உதகையிலும், அதன் சுற்றுபுறத்திலுமுள்ள ஸ்ரீ ஜலகண்டீஸ்வரர் ஆலயம், ஸ்ரீ மாரியம்மன்கோயில், ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆலயம் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப்பெருமாள் ஆலயம், ஸ்ரீ சீனுவாசப் பெருமாள் ஆலயம், விவேகானந்தர் வித்யாலயம், குன்னூர், ஆஸ்ரமம், முதலிய இடங்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் சென்று வந்தார்கள். இவர்கள் சென்றுவர வேண்டிய பொறுப்புக்களை சென்னை, தஞ்சை மதுரை முதலிய துணை ஆணையாளர்களும், கோயம்புத்தூர் உதவி ஆணையாளர் அவர்களும் கவனித்து நடத்தினார்கள்.

11-6-'67 மாலை தாசப்பிரகாஷ் - கீதாஹாலிலும், 12-6-'67 காலை அசெம்பிளி அரங்கிலும் பொதுக்கூட்டத்தில் மகா சந்நிதானங்கள் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள். இக்கூட்டங்களில் துணைத்தலைவர் திரு. சாரங்கபாணி முதலியார்

அவர்கள் தெய்விகப்பேரவையின் நோக்கங்களை எடுத்துரைத்தார்கள். 11—6—67 மாலை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் தோதர்கள் வாழும் இடத்திற்குச் சென்று ஆசியருளினார்கள்.

12-6-'67 காலை அசெம்பிளி அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விழா தொடங்குவதற்கு முன்பாக ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் அவர்களின் பஜனை நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மகாசந்நிதானங்கள் அருளுரைக்குப் பிறகு ஜனங்கள் எல்லோரும் உதகைக்கே தனிப்பட்ட முறையிலுள்ள கட்டுப்பாட்டின்படி ஒவ்வொருவராக வந்து விபூதி பிரசாதம் பெற்றுக்கொண்டு சென்றது திருமடங்களின் அதிபர்களுக்கும் ஜனங்களுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்தியது.

ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் தஞ்சை துணை ஆணையர் திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் தலைமையில் 12-6-67 மாலை திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட மாதர்கள் தங்கள் தங்கள் வீட்டிலிருந்து விளக்குகள் கொண்டுவந்து பூஜை செய்தார்கள். இந்த விளக்கு பூஜை நடைபெற்றதை சுமார் 1500 அன்பர்கள் ஒருவர்பின் ஒருவராகச் சென்று கண்டு பக்தி வெள்ளத்தில் மூழ்கினார்கள். இந்த ஏற்பாடுகளைத் தலைவர் திரு. எம். நாச்சிமுத்துபண்டாரம், அறங்காவலர் திரு. பி. கே. ஜெகதீசன், நிர்வாக அதிகாரி, திரு. கே. ஆறுமுகம் பி. ஏ., முதலியவர் முன்னின்று நடத்தினார்கள்.

உதகையில் நடைபெற்ற தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் கூட்டங்களுக்கும், மற்ற ஏற்பாடுகளுக்குமாக அன்பர்கள், ஒரு வரவேற்புக் குழு திரு. என். கிரியப்பா கௌடர் தலைமையில் அமைத்துக்கொண்டு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து உதவினார்கள். சின்கோனா டைரக்டர் திரு. மோகன் ராவ் அவர்கள் தலைமையிலுள்ள இதர அன்பர்களும் மிக்க உற்சாகத்துடனும் கட்டுப்பாட்டுடனும் இருந்து இப்பேரவையின் கூட்டம் சிறப்பாக நடைபெற உதவினார்கள் என்று சொல்வது இன்றியமையாதது.

குன்னூரிலும், உதகையிலும் ஆங்காங்கே அலங்கார புஷ்ப வளைவுகள் அமைத்தும், வரவேற்பு எழுத்துக்கள் பொருந்திய துணிகள் கட்டியும் நகரையே அலங்காரமாக அமைத்து மகா சந்நிதானங்களுக்கும் அவர்கள் அமைத்துள்ள இத்தெய்விகப் பேரவைக்கும் மக்கள் தங்களுடைய அன்பையும், ஆதரவையும் காட்டினார்கள்.

13—6—'67ல் கோயம்புத்தூரில் தேவாங்க உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் பிரத்தியேகமாக அமைத்த அலங்கார மேடையில் மாலை 7 மணி முதல் இரவு 9½ மணி வரையில் தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் அவர்களின் பஜனை 5½ மணிமுதல் 7½ மணி வரை நடைபெற்றது. மகாசந்நிதானங்கள் மேடைக்கு எழுந்தருளியதும் சீகாழி S. திருஞானசம்பந்தம் தேவாரப் பாடல்களையும், கோவை நன்னெறிக் கழகச் செயலர் திரு. பாபு ராஜ் திருவாய்மொழிப் பாடல்களையும் கடவுள் வாழ்த்தாக ஓதினர். கடவுள் வாழ்த்துக்குப் பிறகு, பேரவையின் துணைத் தலைவர் அதன் நோக்கங்களைப் பற்றி எடுத்துரைத்தார்கள். ஸ்ரீ தருமபுர ஆதீனகர்த்தர், ஸ்ரீ திருப்பனந்தாள் காசிமடத் ததிபர் ஸ்ரீ மதுரை ஆதீனகர்த்தர், ஸ்ரீ குன்றக்குடி ஸ்ரீ திரு வண்ணாமலை ஆதீனகர்த்தர், காஞ்சீபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாச மடம் ஆதீனகர்த்தர், பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் மடத் தின் தலைவர், கோயம்புத்தூர் ஸ்ரீ கௌமார மடத்தின் தலைவர் முதலியோர்கள் ஒரே மேடையில் ஒருங்கே அமர்ந்திருந்து அருளுரை நிகழ்த்தினார்கள். செயலாளர் (பொறுப்பு) திரு. ஏ. சிதம்பரம் பி. ஏ., பி. எல்., அவர்கள் இப்பொதுக் கூட்டத் திற்கான காரியங்களை அமைக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்து கொடுத்து உதவினார்கள். விழா தொடங்குவதற்கு முன்பாக கோவை அட்வகேட் திரு. செங்கோட்டுவேலன், பி. ஏ., பி. எல். அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். கோவை மாவட்டத் திலுள்ள பல சங்கங்களின் சார்பாக மலர்மாலைகள் அணிவித் தும், வரவேற்பு இதழ் வாசித்தும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங் களிடம் கொண்டுள்ள பற்றுதலையும், பக்தியையும் தெரிவித்துக் கொண்டார்கள். கோவை உதவி ஆணையாளர் திரு. சூர்ய ராஜ் பி. ஏ., பி. எல்., அவர்கள் நன்றிகூறப் பொதுக்கூட்டம் முடிவுற்றது.

பொதுக்கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக சமரச சன் மார்க்க சங்கத்தில் கோவை நன்னெறிக் கழகத்தின் சார்பில் எல்லா மகாசந்நிதானங்களுக்கும் பூர்ணகும்ப மரியாதை செலுத் தினர். யானை முன்பாகச் செல்ல, நாதசுரம் முழங்க அன்பர்கள் ஒன்று சேர்ந்து பட்டினப்பிரவேசமாக மகா சந்நிதானங்களை ஒன்றாகச் சேர்த்து மேடைக்கு ஒருங்கே அழைத்துச் சென்றது தனிச்சிறப்புடையதாகும்.

கோவை, நீலகிரி மாவட்ட அறநிலையப் பாதுகாப்பு ஊழியர்கள் இந்த ஐந்து தின தமிழ்நாடு தெய்விகப் பேரவை கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நடத்திக்கொடுத்து உதவினார்கள்.

தமிழகத் திருமடங்களின் மகாசந்நிதானங்களுக்கு அளித்த வரவேற்பிதழ்கள்

உதகைப் பொதுமக்கள் வாசித்தளித்த

வரவேற்பிதழ்

அன்பும் அறிவும் ஆற்றலும் அருளும்
ஆன்மிக வாழ்க்கையோ டாண்டவ ணிடத்தே
இன்புடன் இயைந்த இயல்பும் எவர்க்கும்
ஈகையும் செல்வமும் இனிய முகமும்
உண்மை யொழுக்கமும் உலவாத் தவமும்
ஊக்கமும் முயற்சியும் ஓங்கிய உள்ளமும்
எங்கும் நிறைந்தும் எல்லாம் அறிந்தும்
ஏகமு மாகிய இறைவ ேைடே
ஐயம் இன்றியே அல்லும் பகலும்
ஒருமை நிஷ்டையோ டொன்றிய நிலையும்
ஓதுவே தாகமப் பதிநூல் தெளிவும்
ஔவிய மில்லாச் செவ்விய மனமும்
கலையின் ஞானமுங் காவியப் பண்பும்
சந்ததம் பிறர்நலங் கருதியே உழைத்தலும்
தவநெறி நிற்றலும் தமிழ்ப் பேரன்பும்
நலமுறச் சமய சாத்திர ஞானமும்
பவநெறி செல்லாப் பண்புடை மனமும்
மன்பதை மாட்டு மாருக் கருணையும்
வண்மையும் வடமொழித் தென்மொழிப் புலவோர்
யாவ ரிடத்தும் இல்லை யென்னுமல்
அங்கண் வான மழையெனப் பொழிதலும்
ஞான நூலும் யோக நூலும்
கிரியை நூலும் சரியை நூலும்
மற்றும் பற்பல மாண்புறு நூல்களும்
அச்சிட் டனைவர்க்கும் இலவச மாக

வழங்கியும் கல்வி வளர்ச்சிக் காக
நன்கொடை பலவும் நலமுற உதவியும்
இவைமுத லாம்நற் பண்புடைப் பெரியீர் !
வருக ! வருக ! வழங்குக திருவருள்
ஊட்டி நன் மக்கட்கு ஞான மூட்டுக,
தங்கள் திருவடி தீண்டப் பெறுதலால்
எங்கண் மாநகர்ப் பாக்கிய முற்றது,
கடைக்கட் பார்வையால் தன்னியரானோம்.
மற்றிப் பதிக்கண் ஆலயம் பலவுள ;
வேணுகோ பாலன் திருச்சந்நி தானமும்
தாணுவா லயமும் தேவி கோயிலும்
எல்க்ஹில் முருகன் எழிற்சந் நிதியும்
வெங்கடா சலபதி வாழ்சந் நிதியும்
தக்கிணு மூர்த்தித் திருமடா லயமும்
காசிவிச் வேசர் விசாலாட் சித்தலமும்
சற்குரு சாது மடாதிகள் பிறவும்
சாயி பாபா பஜனை மந்திரமும்
இராம கிருட்டினர் மடமும் ; சிறந்த
இராமாநுஜர்தம் பஜனை ஆலயமும்
மன்னு திருப்பாவை திருவெம்பாவை
பன்னு சங்கமும், அடியார் கூட்டமும்
மாணிக்க வாசகர், தாயுமா னாரது
சபையும் ஹரிஹரன் பஜனை சபையும்
ஈண்டுள, அவையெலாங் கண்டுகளிப் பெய்துக.
போற்றி போற்றிநும் திருவடி போற்றி
வாழ்க வையகம் ; ஆழ்க தீமைகள்
வீழ்க வான்புனல் சூழ்க சிவன்பேர்
என்றென் றேத்தி இணையடி தொழுதோம்
உச்சியின் மீதிரு கரங்கள் குவித்தே
தொழுது நின்றோம் இன்னருள் சுரக்க.

இங்ஙனம்,

10—6—1967. உதகைப் பெருமக்கள்.

நீலகிரி மாவட்டப் பொதுமக்கள்
உவகையுடன் அளிக்கும்
வரவேற்பிதழ்

ஆதீன அருட் குரவர்களே!

தெய்வீகப் பேரவையின் பெருமைமிகு பணியால் பங்கு பெற வருகைதந்துள்ள தங்கள் அனைவருக்கும், மலையரசியெனப் போற்றப்படும் உதகை நகரப் பெருமக்களின் சார்பில் உளங் கனிந்த வணக்கங்களை உரிமையாக்குகின்றோம்.

தமிழகம் தெய்வமணம் கமழும் திருநாடு. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற செந்நெறியில் திளைத்து, பக்திமணம் பரப்பும் பெருநாடு. தமிழையும், சமயத்தையும் இரு கண் ணெனக்கொண்டு, தமிழ்நாட்டின் திருமடங்களும், அவற்றின் மகா சந்நிதானங்களும் ஆற்றிய அரும்பணிகள் பொன் னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கன. தெய்வ உணர்வுமிக்க சான்றோர்களாகிய, சிவப்பிரகாச சுவாமிகள், குமர குருபர அடிகளார், சாந்தலிங்க அடிகளார், சிவஞான முனிவர் போன்ற பெருமக்கள், சமய குரவர்களாகிய நால்வரின் நன்னெறியிலே சென்று ஆற்றிய பெருமைமிகு பணிகள் எண்ணி எண்ணிப் பெருமைப் படுதற்குரியன. சமய உணர்வு என்னும் நீண்ட இழை அறுபடாது நெடிது செல்லவும் சமய குரவர்கள் ஏற்றிவைத்த சமயதீபம், சுடர்விட்டு ஒளிரவும் தாங்கள் அனைவரும் ஒருங்கிருந்து ஆற்றிவரும் அரும்பணியைக் கண்டு பெருமையும் பூரிப்பும் அடைகின்றோம்.

செந்நெறி பரப்பும் தவப் பெருந்தலைவர்களே!

இன்றைய சூழலில் தமிழ்ச் சமுதாயம், சமய உணர்வில் தழைத்தோங்க, நாம் பல்லாற்றானும் பயன் நிறைந்த பணிகளை ஆற்றவேண்டிய நிலையில் இருக்கின்றோம். அறிவியல் வளர்ந் தோங்கிய ஒரு நூற்றாண்டில் நாம் வாழ்ந்து வருகின்றோம். சமய உணர்வையும் பழம் பண்பாட்டையும் மறந்து திரிகின்ற சூழலும், சமய வாழ்வே கண்மூடித்தனமானது என்ற மயக்க

னிலேயும் நமது இளைஞர் சமுதாயத்தை ஆட்கொண்டிருப்பது நாம் அறியாததன்று. சமயத்தின் ஒழுகலாறுகள் தழைத் தோங்கவும் விழுமிய சமய உணர்வு மிக்கு விளங்கவும், நாம் உடனடியாகத் தீவிரமான செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கருதுகின்றோம். சமயப்பணிக்காகவே வாழ்வை அர்ப்பணித்துள்ள தாங்கள், இத்துறையில் எங்களுக்கு வழி காட்ட வேண்டுமெனப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

இத்துடன் இன்றைய உலகப்போக்கு உணர்த்தும் உண்மை களை நாம் மறப்பதற்கில்லை. உலகத்தின் பல்வேறு நாடுகள் மதத்தின் பெயரால் ஒன்றுபட்டு நிற்கின்றன. ஆனால் இந்து மக்களைப் பொறுத்தவரையில் சமயம் இனியும் பிரிக்கும் சக்தி யாக அமையாது, பிணைக்கும் சக்தியாக விளங்க வேண்டு மென்பது எங்கள் பெருவிருப்பம். பல்வேறு திருமடங்களைச் சார்ந்த தாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து காட்சி அளிப்பதே இந்த ஒப்பற்ற குறிக்கோளை விரைவில் அடைவோம் என்ற நம்பிக்கையை நல்குகின்றது.

அன்பும் நலங்கனிந்த அருளாளர்களே !

நமது சமயநெறி தழைக்கவும், சமுதாயத்தில் அறநெறி சிறந்தோங்கவும், தாங்கள் செய்யவிருக்கும் எல்லாப் பணிகளி லும் பங்குகொண்டு பாடுபடுவோம் எனப் பணிவுடன் உறுதி கூறுகிறோம்.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும், இனி எதிர் காலத்தின் சிறப்பும் இன்று எழுந்தருளப்பெற்ற பேறதனால், எற்றைக்கும் திருவருள் உடையேம்" என்ற பெரிய புராண அருள் வாக்கிற்கேற்பத் தங்கள் வருகையால் நாங்கள் பெரும் பேற்றினை அடையப்பெற்றோம். தங்கள் அனைவருடைய வருகையாலும் நாங்கள் புனிதமும் புத்துணர்ச்சியும் பெறு கின்றோம். நாடும் வீடும் நனி சிறக்கவும், எங்கள் வாழ்வில் சமயச்செந்நெறி மிளிரவும் தாங்கள் அனைவரும் எங்களை வாழ்த்தி அருளுமாறு பணிவுடன் வேண்டித் தங்களைப் பெரு மகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

தங்கள் அருளை வேண்டும்,

10—6—1967. தொண்டர் குழாம்,

கோவைக்கு 13—6—67 அன்று எழுந்தருளியபோது
கோவை நகரில் இயங்கும் சமய சங்கங்கள்
பணிவன்புடன் வாசித்தளிக்கும்

வரவேற்பிதழ்

தண்டமிழ்நாடு போற்றும் அருந்தவத் தலைவர்களே!

அறம் வளர்க்கும் அறிவாளிகளைத் தன்னகத்தே தாங்கி நிற்கும் நன்னாடெனெ விளங்கும் தென்னாட்டில் சமயமும், செந்தமிழும் வளர்ந்தோங்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் திருமடங்கள் நிறுவப்பெற்றன. அறம்போற்றும் தவத்திருவடிகள் பலவகைகளில் சீரிய நோக்கங்களை ஈடேற்றிவர பெரும்முயற்சி செய்துவந்தார்கள். நிதி வசதிகளுக்கு ஏற்ப சீரிய பணிகளையாற்றி வந்தது தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்ததே.

திருமடங்கள் செய்துவரும் சமயப் பணிகளில் மெய்யன்பர்கள் பெரிதும் அக்கரைகொண்டு வருகின்றார்கள். அருமையான சமய நூல்களை வெளியிட்டு உதவுவதை உற்சாகத்தோடு வரவேற்கின்றார்கள். இன்னும் மகத்தான அருஞ் செயல்களையும் எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றார்கள்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை நிறுவனத்தின் அமைப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்ட திருமடங்களின் அதிபர்களுக்கு, ஆன்மீகத் துறையில் பற்றுள்ள கோடிக்கணக்கான மக்கள் நன்றி செலுத்துகிறார்கள். இத் தெய்விகப் பேரவை என்றும் நின்று நிலவ வேண்டுமென இறைவனை வழுத்துகின்றோம்.

பேரவையின் ஆதரவில் சமயமும் மொழியும் புத்துயிர் பெற்று தமிழ் நாடும், ஏன்? பாரதமும் பற்பல வழிகளில் முன்னேற்றமடையும் என்று பேராவலுடன் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். பக்தி மார்க்கம் தழைக்க, பாமர மக்களும் எளிதில் படித்துணர்ந்துகொள்ளும் வகையில், தொடர்ந்து பல நூல்களை வெளியிடுவது நன்மை பயக்கும். ஆன்மீக வளர்ச்சி

யைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள சங்கங்களுக்கு உதவி செய்ய வேண்டும். பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி வாழும் வகைகளை அகற்றி மெய்ஞ்ஞான நெறியில் வாழ மக்களை ஊக்குவிக்க வேண்டும்.

தகைமை சான்ற தவ ஞானிகளே!

தங்கள் வரவு நல்வரவாகுக. ஒரே மேடையில் தங்கள் அனைவரையும் ஒருங்கே காணப்பெறும் பேற்றினைப் பெற்றோம் எனப் பெருமிதம் கொள்ளுகின்றோம். எங்களுக்கு ஆசி கூறி அருளுரை வழங்குமாறு வணக்கத்துடன் வேண்டுகின்றோம்.

தங்கள் திருவடிகளைப் போற்றும்,

உலக ஹிந்துமத அபிமான சங்கம்
ஸ்ரீ இராம பாதுகா தாஸ மண்டலி
திருப்பாவை - திருவெம்பாவைக் கமிட்டி
இரத்தின விநாயகர் வார வழிபாட்டுக் குழு
ஸ்ரீ ஐயப்பன் சேவா சங்கம்
ஸ்ரீ ஐயப்பன் பூஜா சங்கம்
சுவாமி விவேகானந்தர் இல்லம்
நன்னெறிக் கழகம்
இராமலிங்க மிஷன்
சமரச சன்மார்க்க சங்கம்
தெய்வ நெறிக் கழகம்
ஸ்ரீ வேத வித்யா மந்திரம்
ஸ்ரீ பாகவதக் கமிட்டி
காந்தி மன்றம்

13—6—1967.

ஸ்ரீ சற்குரு ராஜயோக ஆசிரம ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்கத்திற்கு வணங்கி வரவேற்கும்

வரவேற்பிதழ்

சைவநெறி காக்கும் தவநெறி சமய குரவர்களே!

எங்கள் வணக்கம்.

தாங்கள் இங்கு அருள்கூர்ந்து எழுந்தருளியகாட்சி என்றும் மறக்க முடியாத மாண்புறு காட்சியாகும். தங்கள் திருவடி தீண்டப்பெறுதலால் இம்மண் மிகவும் புனிதமுற்றது. தங்கள் அருட்பார்வையால் நாங்கள் அகவிருள் அகன்று அகமகிழ்வு பெற்றோம்.

எங்கள் சங்கம் சைவம் தழைக்கவும், சமய உணர்வு மிளிரவும், மக்கள் வாழ்வு மலரவும் நீலகிரி, கோவை, மதுரை, திருச்சி, தஞ்சை முதலிய மாவட்டங்களில் தன்னால் இயன்ற அறப்பணிகளைச் செய்துவருகின்றது. நீலகிரி மாவட்டத்தின் காடுகளில் வசித்துவரும் ஆதி குடிகள் கல்வி நலனைக் கருதி ஆதி வாசி சிறுவர்களுக்கு இரண்டு ஆரம்ப உறைவிடப் பள்ளிகளும், சிறுமிகளுக்குத் தனியாக ஒரு உறைவிடப் பள்ளியும், ஆதிவாசிகளுக்கென ஒரு உயர்நிலைப் பள்ளியும் நடத்திவருகிறது.

அரிஜன மற்றும் பிற்பட்ட மக்களுக்காக ஒரு உணவு விடுதியையும், திக்கற்ற சிறுவர்களுக்கு ஒரு புண்ணிய விடுதியையும் சங்கம் நடத்திவருகிறது.

பள்ளிப் படிப்பைப் பூர்த்தி செய்யாமல் நின்றுவிடுகிற ஆதிவாசி அரிஜன மாணவர்களுக்குத் தொழிற்கல்வி கற்பிக்க வேண்டி தச்சுப் பயிற்சி உற்பத்தி தொழில் நிலையம் ஒன்றையும் சங்கம் நடத்திவருகிறது.

இச் சங்கம் தஞ்சை மாவட்டத்திலும் ஒரு ஆரம்பப் பள்ளியை நடத்திவருகின்றது.

நீலகிரியில் உள்ள சங்கத்தின் உணவு விடுதிகளில் மட்டும் ஐந்நூற்றுஐம்பத்தொன்று குழந்தைகளுக்கு உணவு, உடை, படுக்கை, புத்தகம், சிலேட்டு, மருத்துவ உதவி முதலியவைகள் இலவசமாகக் கொடுத்து கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

சமயப் பிரசாரத்திற்கென பஜனை மண்டல் என்ற பெயரில் பிரசார குழு சங்கத்தின் மூலம் இயங்கி வருகின்றது. இக் குழு வார வழிபாடு, விசேட கால உற்சவாதிகள், தீர்த்த யாத்திரைகள், மதமாற்றத் தடுப்பு, நூல் விநியோகம் முதலிய பணிகளைச் செய்துவருகின்றது.

சமயத் தொண்டுக்கென பிரமசரிய துறவிகளை உருவாக்கும் நோக்கத்துடன் தற்பொழுது நான்கு இளம் சிறுர்களை எடுத்து சமயக் கருத்துக்களும், சமயானுஷ்டானங்களும் போதிக்கப்பட்டு வருகின்றது. மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, குற்றவாளிகள் நலன், சமூக சீர்திருத்தம் இவைகளுக்கெனவும் தனிக் குழு ஒன்று இயங்கி வருகின்றது.

இத்தகைய அறப் பணிகளை நாங்கள் வழிபடும் குருநாதராகிய அகஸ்தியப் பரம்பரையில் தோன்றிய ஸ்ரீ சற்குருநாத மகாமுனிவரின் செந்நெறிகளுக்கு இணங்க செயல்படுத்தி வருகின்ருேம். இவைகளுடன் அருள் நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தோற்றுவித்த அருள் நெறித் திருக்கூட்ட மன்றத்தையும் இணைத்து செயல்படுத்தி வருகின்ருேம்.

இத்தகைய திருப்பணிகளில ஈடுபட்டுள்ள தொண்டர்களாகிய எங்களுக்குத் தாங்கள் எழுந்தருளிய காட்சி ஆக்கமும், ஊக்கமும் தந்து எங்களை உய்விக்கின்றது. எனவே, தங்கள் மேலான வருகையை நாங்கள் தலைவணங்கி வருக, வருக என வரவேற்கின்ருேம்.

இங்ஙனம்,

மகாசந்நிதானங்களின் ஆசி விழையும்

ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்க தொண்டர்களுக்காக

அடியார்க்கும் அடியேன் இராமசாமி அடிகள்,

13—6—1967.

காரமடை பெரிய புராணக் கமிட்டியார்
வாசித்தளித்த
வரவேற்புப்பா மடல்

அணியொன்று தமிழகத்தில் அருளன்பு தெய்வநெறி
அறம் தழைக்கப்
பணியொன்று திருமடங்கள் செய் பணியின்
சீர்மையெலாம் பகர்தற் பாற்றோ ?
துணிபொன்று நன் மனத்தால் தெய்வீகப்
பேரவையைத் தொடங்கி ஞான
மணியொன்று புவிபோற்றத் தலைமை பெறும்
குருமணியே ! வருக ! வாழ்க ! (1)

தருமபுர ஆதீனத் தவமணியே ! வருக ! இவண்
தக்கோர் வாழ்த்தப்
பெருமையுறு மதுரைவரு சம்பந்த தேசிகப்பேர்
பிறங்கு சான்றோர்
வருக !இவண் ! திருப்பனந்தாள் அருள்நந்தித்
தம்பிரான் வருக ! வாழ்க !
அருமையுயர் பொம்மபுர ஆதீனத் தலைமைபெறும்
அறிஞன் வாழ்க ! (2)

காஞ்சிநகர் வாழ்ஞானப் பிரகாசத் தவமுனியே
கருணை மிக்கோய்
வாஞ்சை யொடும் எமர்வாழ அருளுரைகள்
தருகஇவண் வருக, வாழ்க !
தாஞ்சிரத்தை யொடு நினைவார் முத்துபெறும்
அருளைவளர் தவத்தின் மிக்கோய்
நாஞ்சிலசொல் கூறி வரவேற்க இவண்
உவந்தனையால் வருக ! வாழ்க ! (3)

கொங்கு நாட்டுடைச் சிரவைக் கௌமார
மடத் தலைமைக் குரிசிலான
எங்கள் சுந்தரமுனிவ வருக இவண்
திருப்பேரூர் எழுந்த சாந்த

லிங்கமட இளவரசாம் இராமசாமிப் பெயர்
கொள் ஏந்தல் வாழ்க !
எங்குமிசை நிறுவியவோர் குன்றை வரும்
முனிவா இனிது வாழ்க ! (4)

வாழியவித் தமிழகத்தை அருள் நலத்தால்
வாழ்விக்க வந்த சான்றீர்
வாழியஎம் தவப்பயனுல் கண்களிக்க இங்
கெய்தும் வண்மை கண்டோம்
வாழியஇப் புவியனைத்தும் சமய நெறி
தலைநின்று வளர்க என்றும்
வாழியநும் அருளாட்சி வளர் செங்கோல்
வாழ்கவென வாழ்த்து கின்ருேம். (5)

இந்நாளெம் கோவை நகர் வரலாற்றில்
எப்பொழுதும் எழுதிப் போற்றும்
பொன்னுளென் றுவக்கின்ருேம் நும் வரவால்
இம்மண்ணும் புனித மெய்தும்
நன்னுளில் எம்போல்வார் உளம் தழைக்க
அருளுரைகள் நவில்க ஈங்கு
பன்னுளும் வாழ்கவெனப் பரமனின்
அடிமலர்கள் பரவு கின்ருேம் ! (6)

இன்னணம்,

13—6—1967. பெரிய புராணக் கமிட்டியார்

கோவை நகரில் இயங்கும் சமய சங்கங்கள் பணிவன்புடன் வாசித்தளிக்கும்

வாழ்த்துப்பா

தண்ணமுதம் வழங்குகின்ற தருமை, ஞானச்
சால்புடைய புகழ்ப்பனசை, வண்ணப் பேரூர்
பண்ணிசைக்கும் நற்காஞ்சி, புனிதக் கூடல்
பரன்மேவு தென்மயிலம், தேவர் போற்றும்

கண்ணனைய சோணகிரி தெய்வக் குன்றை
கலைச்சிரவை — முதலான பதிகள் தோறும்
வண்ணமுற வீற்றிருந்து ஞானம் தந்து
வாழ்வளிக்கும் தபோதனர்காள்! வணக்கம் கொண்மின்.

ஞாலமெலாம் பெருதுயிலிற் கிடந்த போது
நன்ஞானம் என்கின்ற யாழை ஏந்திக்
கோலமுறு பூபாள ராகம் பாடிக்
குவலயத்து மாந்தர்களைத் துயிலெழுப்பிச்
சீலமெனும் பொன்னியினில் மூழ்கச் செய்து
சிவச்சுடரை காண்பித்து வாழ்வு தந்த
மூலமறி தபோதனர்கள் மரபில் வந்த
முனிவர்காள்! தவச்சுடர்காள்! வாழ்மின்! வாழ்மின்!

மன்னுயிர்கள் அத்தனையும் உணர்வு பாழாய்
மாண்புடைய செவித்துளைகள் தூர்ந்து சோர்ந்து
தன்னிகரில் அறிவிழந்து பாவம் விஞ்சித்
தனியிருளே எப்புறத்தும் செறிந்த இன்று
நன்னயமார் அன்பென்னும் தகழி யின்கண்
நவையற்ற ஆர்வமாம் நெய்யைப் பெய்து
துன்னியநற் சிந்தையெனும் திரியை இட்டுச்
சுடர் காட்டும் சால்புடையீர் வணக்கம்! வாழி!!

செம்மைநிறைந் தானந்தம் பொங்கி யோங்கித்
திசைகடந்து நிறைவாகி யார்வம் மல்கி
நன்மையருள் சிவக்கடலுள் மூழ்கி மூழ்கி
நலமளிக்கும் திருவருளை வாரி வந்து
வெம்மைநிறை துயர்க்கோடை முற்றும் நீங்க
மேதினியில் மிகப்பொழியும் பெரியீர்! உங்கள்
தண்மைநிறை கருணைக்கு வணக்கம் செய்து
சால்புக்குப் பல்லாண்டு பாடு கின்றோம்.

நற்றவர்சேர் பொதியமலை தன்னில் தோன்றி
நான்மாடக் கூடலினில் செழித்துப் பொங்கிக்
கற்றவர்தம் நெஞ்சத்தே நடிக்கும் தெய்வக்
கலைத்தமிழை, நல்லறத்தை உலகம் போற்றும்
கொற்றமுறு சிவநெறியை, அருளைக் காத்துக்
குவலயத்தில் சுவர்க்கத்தை இறங்கச் செய்த
பெற்றிமிகு தபோதனர்காள்! உங்கள் அன்பு
பிறைபோல நாடோறும் வளர்க! வாழ்க!!

காத்திகத்தால், பொல்லாத வறுமைப் பேயால்,
நடுக்குறுத்தும் கொடும்போரால், நாளும் சோர்ந்து
மாத்தமிழர் வாடுகின்றார்; அன்னார் நெஞ்சில்
மாசற்ற நம்பிக்கை அமுதைப் பாய்ச்சிக்
காத்தளிக்க வேண்டுகிறோம்; உள்ளப் பாலை
கருணையினால் செழிப்பெய்த வேண்டும் அங்கே
கூத்தனிள முறுவலினைக் காட்டி ஞானக்
கோமளஞ்சேர் அருளாடல் புரிதல் வேண்டும்.

மாயையெனும் திரைவிலக்கி ஞானம் என்னும்
மாசற்ற கற்பூர ஒளியின் கண்ணே
நாயகனை சிவக்கொழுந்தை யாவு மாய
நாதாந்தப் பேரொளியை எமக்குக் காட்டி
நோயகன்ற வாழ்வருளும் பெரியீர்! உங்கள்
நோன்மலர்த் தாள் பணிகின்றோம் வாழ்த்துகின்றோம்
நேயமொடு பல்லாண்டு பாடுகின்றோம்
நிறைவுறுக சிவச்சோதி வளர்க! வாழ்க!!

(கவி; கம்பராமன்)

தங்கள் திருவடிகளைப் போற்றும்,

உலக ஹிந்துமத அபிமான சங்கம்
ஸ்ரீ இராம பாதுகா தாஸ மண்டலி
திருப்பாவை - திருவெம்பாவைக் கமிட்டி
இரத்தின விநாயகர் வார வழிபாட்டுக் குழு
ஸ்ரீ ஐயப்பன் சேவா சங்கம்
ஸ்ரீ ஐயப்பன் பூஜா சங்கம்
சுவாமி விவேகானந்தர் இல்லம்
நன்னெறிக் கழகம்
இராமலிங்க மிஷன்
சமரச சன்மார்க்க சங்கம்
தெய்வ நெறிக் கழகம்
ஸ்ரீ வேத வித்யா மந்திரம்
ஸ்ரீ பாகவதக் கமிட்டி
காந்தி மன்றம்

மதிப்புரை

ஆடல்வல்லான்

திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ ஞானமா நடராசமூர்த்தியின் மகாபிஷேக மலராக வெளிவந்துள்ள, 'ஆடல்வல்லான்' என்னும் அரிய நூல் வரப்பெற்றோம். 'சொரூபநிலையில் ஒரு பெயரேனும், ஓர் உருவமேனும் இல்லாதவனாகிய இறைவன், தடத்த நிலையில், அளவற்ற பெயர்களை யுடைய அளவற்ற உருவங்களை யுடையவனாகின்றான்' என்பதை, "ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் — திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்னும் திருவாசகத்தால் நன்கு அறிகின்றோம். இதனையே ஞானசம்பந்தர் "நானாவித உருவாய் நமை ஆள்வான்" என்று அருளிச்செய்தார். அந்த நானாவித உருவங்களில் ஒன்று ஆடல் திருவுருவம். அவ்வொன்றிலேதான் எத்தனை எத்தனை வேறுபாடு! எத்தனை எத்தனை அழகு! ஆடல் திருவுருவம் அத்துணைப் பெருமையையும், அழகினையும் உடையது என்பதை, 'ஆடல்வல்லான்' என்னும் இந்நூல் அங்கை நெல்லிக் கனியெனக் காட்டுகின்றது. இந்நூலின் ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள், தமது வடமொழி தென்மொழி வன்மையாலும், ஆராய்ச்சி அனுபவத்தாலும் பல வடநூல் தமிழ் நூல்களிற் கூறப்பட்ட கலைப் பொருள்கள் பலவற்றை நுணுகி ஆராய்ந்ததன் பயனாக விளங்குகின்றது இந்நூல். நாட்டியக் கலையின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு முதலியவற்றின் விளக்கங்களுடன், சாத்திர உண்மைகளாகிய நடராச தத்துவம், எழுவகைத் தாண்டவம், நவதாண்டவம், நூற்றெட்டுத் தாண்டவம் என்பவற்றின் விளக்கங்களையும் ஆசிரியர் இதன்கண் தந்திருத்தல், ஆடற் பெருமானிடத்தில் அன்புசெலுத்தி அருள்பெற விரும்பும் அறிஞர்கட்குப் பெரும் பயன் அளிப்பதாகும். கூத்தப் பெருமானது நடன பேதங்களுடன், அப்பெருமானது தொன்மை, வரலாறு, விரதம், வழிபட்டுப் பயன் பெற்றோர் முதலிய குறிப்புக்களும் இதன்கண் தரப்பட்டுள்ளன.

இந்நூற்குச் சிறப்பிற் சிறப்பாய் அமைந்திருப்பவை கூத்தப் பெருமானது பல்வேறு வகைப்பட்ட நடனங்களையும் விளக்கும் கண்கவர் வனப்பினவாய் அமைந்த அழகிய வண்ணப் படங்களும், தலங்கள் பலவற்றிலும் உள்ள ஆடல்வல்லான் திருவுருவங்களது நிழற் படங்களும், நூற்றெட்டு நடன படங்களும், பிறவுமாகும்.

இப் படங்களை அவ்வத்தலங்களில் நேரிற் சென்று நிழல் எடுக்கவும், தியான சுலோகம் முதலியவற்றைக் கொண்டு அவற்றின்படி எழுதுவிக்கவும் எடுத்துக்கொள்ளப்பட்ட உழைப்பு மிக மிகப் பெரிதாகும் என்பது இவற்றைக் காண்பார்க்கு எளிதின் விளங்கும். வழிபாட்டிற்குப் பயன்படும் வகையில் மந்திர யந்திரப் படங்களும் நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. பொதுவாக இந்நூலைக் கண்டவர்க்கு, புளிக்கண்டவர்க்குப் புனல் ஊறுமாபோல் களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்கு உண்டாகும் அனுபவம் தோன்றுதல் உறுதி. ‘கணபதி’, ‘முருகன்’ என்னும் நூல்கள்போலத் தங்கள் உபாசனா மூர்த்தியாகிய ஆடல்வல்லானைப்பற்றிய இவ் அருங்கலை நூலையும் வெளியிடத் திருவுளம் பற்றித் திருக்கண்ணோக்கம்பாலித்த ஆவடுதண்டுறை ஆதீன 21ஆவது மகாசந்நிதானம் அவர்களது பெருங்கருணைக்குத் தமிழுலகமும், சைவ உலகமும் செய்யுங் கைம்மாறு இந்நூலைப் பெற்று ஆர்வத்துடன் உணர்ந்து பயன் பெறுதலேயாகும்.

[சி. அ.]

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

"My wife and I have had the opportunity of visiting this magnificent temple along with our children by the grace of the Lord Umamaheswara. We are immensely satisfied with the holy dharsan ot the Lord and Amman. We are naturolly struck by the tidy maintenance of fhe premises. We are greateful to the Superintendent of the temple for faking us r und the Khetrams and explaining to us fairly vividly the salient features of the sthalapurana. We iook forward to visiting this great shrine by the grace of the Lord."

(Sd) M. Venkatratnam, I. A. S.,
Collector, Guntur.

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

தீஞ்சுவைத் தேன்

" பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் "

—ஔவையார்.

" ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே " —மாணிக்கவாசகர்.

தேன் என்றதுமே குழந்தைகள் முதல் வயோதிகர்கள், ஞானிகள் வரை எல்லோர்க்கும் உண்ண வேண்டும் என்ற எண்ணம் எழுகின்றதல்லவா! மருந்து கசப்பாக இருப்பினும் தேனில் கலந்து கொடுத்தால் போதும் குழந்தைகளுக்கு ஆனந்தம் தாங்க முடியாது.

மாணிக்கவாசகர், ஔவை, திருநாவுக்கரசர், சுந்தரர், இராமலிங்க அடிகளார் போன்ற ஞானிகள் அடிக்கடி தேனை ஆண்டவனுடைய திருவடிக்கு ஒப்பான ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது என்று பாடியிருப்பதால் தேனில் யாரும் கூற முடியாத ஒரு அற்புத சத்து இருக்கின்றது என்பது யாராலும் மறக்க முடியாத உண்மை.

பரிசுத்தமான மலர்களில் உற்பத்தியாகி தீஞ்சுவையினைத் தன்னை உண்பார்க்கும் இன்பத்தைக் கொடுத்து அவர்களுக்குள்ள நோய் அனைத்தையும் தீர்க்கும் மருந்தாக உதவுகின்றது என்பது உண்மை. தேனை விடாது உண்டுவந்தால் உடலில் உள்ள நோயைத் தீர்ப்பதுமட்டுமின்றி பேரின்பத்தை அளிக்கக்கூடிய சக்தியையும் தன்னிடத்தே பெற்றிருப்பதாலோ என்னமோ " ஆனந்தமானை தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த செல்வமே சிவபெருமானே " என்று அருளியுள்ளார்.

தேனுக்கு இவ்வளவு பெருமைவரக் காரணமென்ன? அதில் என்னென்ன சத்துப் பொருள்கள் அடங்கி இருக்கின்றன என்பதை ஆராய்வோம்;

தேன் கூட்டிலிருந்து எடுக்கும்போது தெளிவாய் பாகு போல் மஞ்சள் நிறமாய் காணப்படுகின்றது. பிறகு படிப் படியாய் உறைந்து மென்மையான அரக்கு நிரத்தை அடைகிறது. எந்த மலரிலிருந்து தேனீக்கள் தேனைச் சேகரிக்கின்றதோ அந்த மலரின் நறுமணத்தை அந்தத் தேன் பெற்றிருக்கின்றது. தேனின் சுவையும் மணமும் இடத்திற்குத் தக்கபடி வேறுபாடு அடைந்திருப்பினும் அவற்றிலுள்ள ரசாயனப் பொருட்கள் மாறுபாடு இன்றி ஒன்ருகவே இருக்கும். தேனின் ஜீரணிக்கப் பெற்ற திரவரூபமான குளூம்கோஸ், லெவுலோஸ் என்னும் இருவகைச் சர்க்கரைச் சத்துக்களும் நமது உடலில் காணப்படும் நுண்ணணுக்களும் (Cells) திசுக்கள், மற்றும் பல உறுப்புகள் வேலை செய்வதற்கும் வேண்டிய b-2, B-6. C. H. K. ஆகிய வைட்டமின் சத்துக்களும், சோடியம், கேல்ஷியம், மங்கனீசியம், இரும்புபோன்ற உலோகச் சத்துக்களும், அயோடின் பாஸ்பரஸ், கந்தகம் முதலிய தாதுப்பொருள்களும், குளோரின் என்னும் மூலகமும், சிட்ரிக், லாகடிக், ஆகசாலிக். டார்ட்டாரிக் முதலிய அமிலங்களும் கலந்திருக்கின்றன. மேலும் தேனில் சிறிய அளவாக இருந்தபோதிலும் போதிய அளவு பார்மிக அமிலமும் கலந்திருக்கிறது. தேனில் அல்பியூமென் என்னும் பதார்த்தமும், சில உப்புச் சத்துக்களும், கொஞ்சம் கொழுப்புச் சத்தும், பைபிரின் என்னும் பசையான பதார்த்தமும் கலந்திருக்கிறது.

அண்மையில் W. H. O.ல் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து ஊட்டம் அளிக்கக்கூடிய உணவு வகைகளும், நோய் எதிர்ப்பு சத்துப்பொருள்களும்கொண்ட அற்புதமான மூலப்பொருள்களும் தேனில் காணப்படுவதாக தெரிவித்திருக்கின்ருர்கள். நம், ரத்தத்தில் காணப்படும் சத்துக்கள் அனைத்தும் பெரும்பாலும் தேனில் காணப்படுகின்றது. (தொடரும்).

நோயாளியின் குறிப்பு

நான் சென்ற இரண்டு வருடங்களாக சர்க்கரை வியாதியினுல் சிரமப்பட்டு மாயூரம் டாக்டர்களிடமும் சென்னையில் உயர் டாக்டர்களிடமும் சென்று ஆங்கில முறைப்படி வைத்தியம் செய்து வந்தேன். அதில் சர்க்கரை வியாதி இன்ஸுலின் ஊசி போட்டுவரும் வரையில்தான் சர்க்கரையில்லாமல் இருந்து வந்தது. ஊசியை நிறுத்திஞல் சர்க்கரை உண்டாகித்தான் வந்தது. இது மிகவும் கவலையாக இருந்தது.

ஒருநாள் தருமை ஆதீன ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகாசந்நிதானம் அவர்கள் சொன்னதின்பேரில் வைத்தீஸ்வரன்கோயில்

சித்தவைத்தியசாலை டாக்டர், K. இராமகிருஷ்ணன் அவர்களிடம் இது சம்பந்தமாக சிகிச்சைக்கு மருந்து வாங்கி 15 நாள் எண்ணை முறையும், பத்தியமும் இருந்தேன். பின் 30 நாள் பற்பட நெய்யில் சாப்பிட்டு வந்தேன். இப்பொழுது எப்போது நீரை சோதித்தாலும் கொஞ்சம்கூட சர்க்கரையில்லை. உடம்பில் உள்ள அசதி, பலகீனம், நீங்கி, புத்துணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. இவ்வளவு விஞ்ஞான முறையில் ஆங்கில வைத்திய முறைகள் இருந்தும் சித்த வைத்தியத்தில் இவ்வளவு உயர்ந்த மருந்து தயாரித்து அளித்த டாக்டர், இராமகிருஷ்ணன் அவர்களுக்கும், இந்த இலவச சித்த வைத்தியசாலையை வைத்துப் பரிபாலித்து வரும் எங்கள் கயிலைக் குருமகாசந்நிதானத்தின் பொன்னார்ந்த திருவடிகளுக்கும் என் வணக்கம் உரித்தாகுக.

தங்கப்பா சொக்கலிங்கம் செட்டியார்,
காசுக்கடை, கூறைநாடு, மாயூரம்.

சிகிச்சை பெற்றவர்கள் விபரம்

இம்மாதம் நம் வைத்திய சாலையில் வைத்தியம் செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை.

ஆண்கள்	...	...	1069
பெண்கள்	...	...	1213
குழந்தைகள்	...	...	905
		ஆக மொத்தம்	3187

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur

கடவூரில் தரிசிக்கும் காசினி யோரெல்லோர்க்கும்
அடவுடனே அமிர்தத்தை உகந்தளிப்பாள் -
கடவுளருள் கைகூட்டும் வினையோட்டும், களிப்பூட்டும்
கண்டோர்க்கு
திகைப்பின்றித் திகழ்ந்திடுமே, திருக்கடையூ ரித்தலத்தே

(ஒ-ம்.) திரு. வை. சுப்பிரமண்யபாரதி
ஜோதிட வித்வான்
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை.

செய்திகள்

உதகையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தெய்வீகப் பேரவைக் கூட்டத்திற்கு எழுந்தருளிய போது உதகை குதிரைப்பந்தயத் திடலில் பொதுமக்கள் அளித்த வரவேற்பு விழாவிலும் தாசப்பிரகாஷ் கீதாஹாலிலும் அசெம்பிளி அரங்கிலும், கோவை தேவாங்கா உயர்நிலைப்பள்ளி, மைதானத்திலும் அருளுரை நிகழ்த்தியருளினார்கள். அவ்வருரைகளின் சில குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

தென்னாட்டில் இந்து சமயங்களின் ஒற்றுமையை உருவாக்கத் தோன்றியுள்ளது தமிழ்நாடு தெய்விகப் பேரவை. சமயப்பணி சமூகநலப்பணி இவைகளால் மக்களின் மனதை நல்வழியில் திருப்பித் தொண்டுசெய்ய முற்படும் இப்பேரவைக்கு பொதுமக்கள் அனைவரும் ஆதரவு தருதல் வேண்டும். இப்பேரவையின் மூலமாகத் தமிழ்நாட்டிலுள்ள பல சமயத் தலைவர்களை ஒரு சேரச் சந்திக்கும் ஒருபேறு மக்களுக்குக் கிடைத்து வருகிறது.

தமிழ்மக்கள் தெய்வ பக்தியில் அன்றும் இன்றும் சிறந்தவர்கள். என்றும் இந்த இறையுணர்வு மக்களிடையே நிலைபெறுதல் வேண்டும். எல்லா நலங்களையும் நமக்குத் தந்துதவும் இறைவனை நாடோறும் சிந்தித்து வழிபடவேண்டும்.

" வாழ்ந்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்ந்தச் சென்னியும் தந்த தலைவனைப்
சூழ்த்த மாமலர் தூவித் துவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே '

என்று கூறுகிறார் அப்பர். அப்பெருமானுடைய அருளொன்றே நம்மை இம்மையிலும் மறுமையிலும் வாழ்விக்க வல்லது. அப்பெருமானுடைய திருநாமத்தையே கிடைவிடாது ஓதவேண்டும்.

'சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.'

என்பது திருமூலர் திருமந்திரம். 'சிவாயநமஎன்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை' என்பது பழந்தமிழ்ப் பாட்டு. எனவே இறைவனைத் தோத்திரம் சொல்லி வழிபடுவதும் அவனுடைய திருப்பெயரை ஓதுவதும் நம்மை உய்விக்கும் வழிகளாகும்.

'ஐயனே அரனே என்றரற்றினல்
உய்யலாம் உலகத்தவர் பேணுவர்
செய்யபாதம் இரண்டும் நினையவே
வையமாளவும் வைப்பர் மாற்பேறரே'

என்பது திருமுறைத் திருவாக்கு.

இறைவன் கருணையை எளிதில் பெறும் வழி திருமுறைகளை ஓதுதல் ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

'ஆசையறுய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.'

என்று அருளிச்செய்கிருர்கள்.

மக்கள் அனைவரும் சமயநெறியிலே நின்று இறைவன் திருவருளைப் பெறவேண்டும் என்பதே சமயத்தலைவர்களின் ஒருமித்த கருத்தாகும்.

வாழ்க மக்கள். வளர்க சமயநெறி.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

இந்த தரிசனத்திற்கு காரணமான கானுடுகாத்தான் வெ. வீர. நா மு. சுப்பையாசெட்டியாருக்கு ஸ்ரீ தர்மபுர ஆதீன கர்த்தரவர்களின் தேவஸ்தான சிப்பந்திகள் முயற்சி அதிகம் பாராட்டற்குரியது.

3—4—67. (Sd.) T. V. S, Bharathi.

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கஞூ ஆடிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—7—67 முதல் 16—8—67 முடிய)

ஸ்ரீ சிவபெருமான் திருவருளை முன்னிட்டு நிகழும் பிலவங்க வருஷம் ஆனி மாதம் 32ம் தேதி பானுவாரம் சுக்கில தசமியும் விசாக நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 4 நாழிகை 6 விநாடியளவில் மேஷ லக்னத்தில் மிதுன நவாம்சையில் துலா சந்திரனில் ஸ்ரீ சிவசூரிய பகவான் லோக க்ஷேமத்துக்காக தக்ஷிணாயண புண்ணிய காலத்தில் கடகராசியில் பிரவேசம் செய்கிறார். ஸமஸ்த லோகங்களும் சஸ்ய விருத்தி தான்ய விருத்திகளுடன் சகல பிரஜைகளும் சௌக்கியமடையுமாக.

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களையும் அன்னிய ஸ்தல வாசத்தையும் ஜீவன லாபத்தையும் தரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பினால் சகல காரியமும் சாத்தியமாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும் வியவகார வெற்றியும் கீர்த்தி பத்திரமும், பெரியோர்களின் அன்பும் தேவதா குரு பக்தியும் ஏற்படும். ஆனாலும் மத்தியில் குடும்பத் தொல்லைகளால் விசேஷ விரயங்களும் அடிக்கடி அலைச்சல்களும் ஆரோக்கியக் குறைவும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபபலனைத்தரும். குடும்பம் ஓங்கும். ஜீவன விருத்தி ஏற்படும். ஸ்தாவரஜங்கம சொத்துக்களில் கிரய விக்ரயங்கள் ஏற்படும். புதன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். நூதன முறையில் தொழில் ஏற்படச்செய்யும். ஜீவனம் ஓங்கும். விவசாயம் ஓங்கும். குடும்பத்தொல்லைகளால் வைத்திய செலவுகளும் அநாவசிமான செலவுகளும் ஏற்படும். நினைத்த காரியம் உடனே நடக்காது. ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். வீண் செலவுகளும், வீண்தொல்லைகளும் துர்புத்தியும் துஷ்டசேர்க்கைகளும் ஏற்படச்செய்யும். ஆனாலும் தொழில் விருத்தியும் இல்லற சேர்க்கையும் மேலோர்களிடம் இருந்து நன்மையும் உண்டுபண்ணும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

உத்திர நக்ஷத்திரம் 2, 3, 4 பாதங்கள் பூர்ண சுபம் இருக்காது. ஹஸ்தம் நான்குபாதங்களும் சித்திரை 1, 2 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். சகல காரியசித்தியும் அசாத்திய சாதனங்களும் நூதன பிரபு தரிசனமும், உத்தியோக லாபமும் கீர்த்தி பத்திரமும் சஸ்ய விருத்தியும் மனதிற்கு சந்தோஷத்தையும் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஆரோக்யக்குறைவும் குடும்பத்தொல்லைகளும் சிரமத்தைத்தரும். வரவு செலவுகளும் சமனாகும் மேலோர் பெரியோர்களின் அன்பினால் எல்லாக் காரியங்களும் சித்தியாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். தனதான்ய விருத்தியும், நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளும் ஜீவன லாபமும் கீர்த்தி பத்திரமும், சஸ்ய விருத்தியும் நூதன கிரக லாபமும் ஏற்படச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபம் இருக்காது. ஆரோக்யக் குறைவினால், அதிக செலவினங்களும் குடும்பத் தொல்லைகளும் மேலோர் பெரியோர்களின் அன்புக்குறைவும் சதா மனதில் சஞ்சலமும் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். குடும்பம ஓங்கும். உத்தியோகத்தில் கீர்த்திபத்திரம் கிடைக்கச்செய்யும். நஷ்டதனம் தானாக வந்துசேரும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் சேரும். புதன் வியாழன் சுபமாகும்.

11. கும்பம் அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும் அதிகத்தொல்லைகளும், அதிகச் செலவினங்களும் ஏற்படச் செய்யும். குடும்ப பாதையால் பல சிரமங்கள் காட்டும். அன்னிய ஸ்தல வாசம் ஏற்படச்செய்யும். பந்துமித்திராளுடைய அன்புக் குறைவும் காட்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். காரியங்களில் விக்கினமும், அதிக செலவினங்களும் மனதிற்கு சந்தோஷம் இல்லாமலும் குடும்பாதைகளும் வைத்திய செலவினங்களும் ஏற்படும். ஆனாலும் ராஜாங்க பத்திரமும் மேலோர்களின் அன்பும் விசேஷமாய் ஏற்படச்செய்யும். தெய்வபலம் முன்னின்று காக்கும். சுபம் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு : உலகில் தர்ம பூமிகள் செழிக்கும். ஸஜ்ஜனங்கள் ஸாதுக்கள் கடவுளால் ரக்ஷிக்கப்படுவார்கள். கிருஷி காரியங்கள் விருத்தியாகி ஸஸ்ய விருத்தி ஏற்பட்டு உலகம் சுபிக்ஷம் அடையும். சுபம் உண்டாகும்.

14 AUG 196

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க ஆண்டு ஆடித்திங்கள் 10—8—67 [இதழ்

தருமையாதீனத்தில் :

தமிழ்நாடு தேய்விகப் பேரவைக் குழுவினர்க்கு
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பொன்னுடைபோர்த்திய காட்சி

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

வாக்குமனக் காயத்தான்
வந்தபொருள் அத்தனையும்
வாக்குமனக் காயமுடன்
மாயுமே — வாக்குமனக்
காயம் உடனிழந்து
காண்ஞா திருஞான
ஞேயம் இழந்த
நிலை.

ஆசிரியர் :-

வித்துவான்.

சோமசுந்தரத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

“ ஞானசம்பந்தம் ”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 || 10–8–67 || இதழ் 9

உட்பொருள்

எண்		பக்கம்
1	திருக்கூட்டச் சிறப்பு ...	473
2	சைவ ஆதீன பரம்பரை	478
3	சித்தாந்த வினாவிடை ...	484
4	தயா மூல தன்ம வழி ...	489
5	வரவேற்புமடல் ...	495
6	ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கும், மடாதிபதிகளுக்கும் அளிக்கப்பெற்ற வரவேற்புரை ...	498
7	வரவேற்புப் பாடல்கள்	502
8	தருமையில் தமிழ்நாடு தெய்விகப் பேரவைக்கூட்டம்	508
9	தருமையில் தெய்விகப் பேரவைச் சிறப்புக்கூட்டம் அருளிய அருளுரைச் சுருக்கம்	512 ...
10	மாயூரம்-வள்ளலார்கோயிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவைச் சிறப்புக் கூட்டம்	516
11	தையல்நாயகி அந்தாதி	521
12	இலவச சித்த வைத்தியசாலை ...	525
13	மதிப்புரை ...	528
14	செய்திகள் ...	530
15	எதிர்காலம் ...	534